

559
CONNEMARA
NOV 1968

நடை

1

எண் 1. இலக்கிய முத்திங்கள் ஏடு. அக்டோபர் 1968

நடை

● இலக்கிய முத்திங்கள் ஏடு ● ஆசிரியர் [illegible]கா. கிருஷ்ணசாமி ●

தமிழ் மக்களுக்கு

'நடை' என்னும் புதிய ஏட்டினை அறிமுகப் படுத்துவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். 'நடை' ஓர் இலக்கிய முத்திங்கள் ஏடு; இலக்கியப் படைப்புக்கும் திறனாய்வுக்கும் என்றே வருகின்ற ஏடு. இதுபோன்ற ஏடு தமிழுக்குப் புதிதல்ல; என்றாலும் 'நடை' பல வகையிலும் மாற்றம் உடையது என்பது வாசகரின் முதற் பார்வைக்கே புலனாகி இருக்கும். இந்த மாற்றம் 'நடை'யினது நோக்கத்தின் அடிப்படையில் எழுவதாகும்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் திறனாய்வு வளர்ச்சிக்கும் ஒரு புதிய வாய்ப்பை அளித்து அவற்றின் வேகத்தை அதிகப்படுத்த வேண்டும் என்பதே 'நடை'யின் நோக்கம். இந்த இருவகை வளர்ச்சியிலும் நாட்டம் கொண்ட நண்பர் சிலரின் கூட்டு முயற்சியே இந்த 'நடை'. 'நடை'யின் நோக்கம் நிறைவேறவும் 'நடை' வெற்றியுடன் நடக்கவும் இக்கூட்டு முயற்சியில் வேறு சிலரின் துணையும் தேவை: இதற்கு எல்லா வகை எழுத்தாளரையும் விமரிசகரையும் துணை செய்யுமாறு அழைக்கிறோம். சிறுகதை, கவிதை, கவிதை நாடகம், மொழிபெயர்ப்பு, திறனாய்வுக் கட்டுரை முதலியவற்றை 'நடை' வரவேற்கிறது. ஓர் ஏட்டின் வெற்றிக்கு அடிப்படைத் தேவை வாசகரின் பேராதரவுதான். எனவே இலக்கியச் சுவைப்புக்குப் புகழ்பெற்ற தமிழ் மக்களைத் துணைபுரியுமாறு அழைக்கிறோம்.

நடப்பு

ந. முத்துசாமி

நான் முதலில் கிணற்றில் விழுந்தபோது எனக்கு மூன்று வயது என்று சொன்னார்கள். அதற்குப்பிறகு முப்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. கிணற்றில் விழுந்த அனுபவம் எனக்கு நிறைய இருக்கிறது. தலையீடு இல்லாது, ஆடும் கற்களின் மேல் குறுக்குப் பாலம் போட்ட, ஏற்றத்தின் பற்றுக்கோல் தொங்கும் கிணற்றில் விழுவதற்கும் சகடையின் தாம்புக் கயிறு தொங்கும் தலையீடு உள்ள கிணற்றில் விழுவதற்கும் வித்யாசம் உண்டு. இரண்டு வித அனுபவமும் எனக்கு இருக்கிறது. தாம்புக் கயிறு தொங்கும் கிணற்றில் ஆபத்துக் கொஞ்சம் குறைவு. விழுந்தால் தடுக்காமல் தாம்புக் கயிறு சகடையில் நழிவிவரும். விழுவதற்கும் இடம் தாராளமாக இருக்கும். பற்றுக் கோலோ வணக்கம் இல்லாதது. கிணற்றின் முழு வட்டத்தைக் குறுக்குப் பாலம் குறைக்கும். மேலும் குறைக்க பற்றுக்கோலின் முனையில் ஏற்றச் சாலும் தொங்கலாம்.

மூன்று வயதில் தாம்பு தொங்கும் கிணற்றில் விழுந்தேன். விலங்குகளைப் போலக் கயிறும் பழகிவிடும் போலிருக்கிறது. அது என்னைச் சிராய்க்கவில்லை என்று சொன்னார்கள்.

அப்பா இந்த வீட்டை வாங்கிக் கட்டியபோது தான் கிணற்றுக்குத் தலையீடு கட்டினாராம். அதற்கு முன்பு அது தலையீடு இல்லாத பழைய கிணறாகவே இருந்தது. அங்கு வாழ்ந்தவர்கள் எத்தனை தலைமுறைகளாக கிணற்றில் தண்ணீர் எடுத்தார்களோ? அவர்கள் ஏற்றமும் போட்டுக் கொள்ளவில்லை. குறுக்குப் பாலம் போட்டு தாம்புக் கயிற்றால் குடத்தைக் கட்டி மொண்டார்கள் போலிருக்கிறது. எல்லாப்பக்கங்களிலும் நின்று மொண்டிருக்கிறார்கள், குடம் இடித்து இடித்து உரையின் படிகள் முனை மழுங்கி விட்டன. கிணறு முழுதும் ஒரே உரையால் ஆனது போலத் தோன்றிற்று. எனக்குத் தெரிந்து அது இப்படித்தான் இருந்தது.

சில உரைகளின் கற்கள் பெயர்ந்து கிணற்றில் விழுந்து பொந்துகள் தோன்றியிருந்தன. ஆண்டின் பெரும்பகுதி நீரின் எல்லை எட்டாத இடத்தில் இருந்த பொந்துகளில் சிட்டுக் குருவிகள் கூட்டு கட்டின. கிணற்றில் வாளி நுழையும் போது பயந்து பறந்து மேலே மோதிக்கொண்டோடும் அவை. ஒரு பெருங்காற்றில் கிணற்றுக்கும் வைக்கோல் போருக்கும் இடையில் வேரோடு பெயர்ந்து விழுந்து வானில் வேரோடியது போலக் கிடந்த புளிய மரத்தைக்காள வாய்க்கு வேட்டு வைத்துப் பிளந்த போது ஒரு பொந்தில் இருந்து

இரண்டு கற்கள் நழுவிக் கிணற்றில் விழுந்தன. கூடு சரிந்து குருவிகள் மேலே பறந்தன. ஆகாரத்திற்கு வாயைப் பிளக்கும் இறக்கை முளைக்காத குஞ்சுகள் தண்ணீரில் விழுந்து இறந்தன. கூடு நீரில் மிதந்தது. மெல்லிறகுகளும் மிதந்தன. காக்கை எச்சம் பட்டு மேல் இடுக்குகளில் முளைக்கும் செடிகளைப் பிடிங்கி எரியும்போது சமயத்தில் கற்களும் பெயர்ந்து விழுவதுண்டு. மேல் உரையின் ஒரு பகுதியில் கற்கள் உப்புப்பூத்து உதிர்ந்து கொண்டிருந்தன. தண்ணீர் படாத அதன் அடிப் பகுதிகளில் கட்டியிருக்கும் சிலந்திக் கூடுகளில் செங்கற்பொடி உதிர்ந்திருக்கும். சிலந்திகள் கைவிட்ட கூடுகள் நைந்த சிவப்புத் துணியாகத் தொங்கிக் கொண்டிருக்கும். பூச்சிக் கூடுகளை எடுத்து சுத்தம் செய்யவோ படிகளில்லை. வேறு வகையில் ஒட்டடை அடிக்கவும் அக்கறையில்லை. கிணற்றில் வீழுந்த என்னை எடுத்தபோது இருந்த எச்சிக் கூடுகளையும் எடுத்திருப்பார்கள். அது நோக்க மில்லை என்றாலும் என்னை வெளியில் எடுக்க பட்ட அவஸ்தையில் அவையும் கலந்திருக்க வேண்டும்.

எங்களுக்கு, அது பூமியில் தோண்டிய ஆழமான தண்ணீர் தொட்டியாகத்தான் இருந்தது. கடுங்கோடையில் அதன் தண்ணீர் ஓர் அடிக்குக் குறைந்து விடும். சாயங்காலம் மாட்டுத் தொட்டிகளுக்குத் தண்ணீர் ஊற்றிய பிறகு காவிறி ஊற்றைப்போல தரை தெரிய ஆரம்பித்து விடும். இரவு முழுதும் ஊறிவரும் ஓர் அடித்தண்ணீரை வைத்துக் கொண்டு ஒரு பகல் பொழுதைக் கழிக்க வேண்டும். அதன் ஊற்றுக்கண் அடைபட்டு விட்டது என்று கோடையில் சூராவளி வரையில் தோண்டிப் பார்த்தோம். ஒரு பக்கத்துக் கற்கள் சரிய ஆரம்பித்தன. சூராவளி சலசலத்து இருந்தது. இனிமேல் தோண்டுவது கிணற்றுக்கே ஆபத்து. அந்த முயற்சி அத்துடன் கைவிடப்பட்டது. நான் கிணற்றில் விழுந்த பொழுது இந்த மாற்றத்தைத் தவிர மற்றவை இப்பொழுது இருப்பதைப் போலவே இருந்தனவாம்.

நான் விழுந்தது கோடைகாலம். வரண்ட காற்றும் வீசாமல் புழுங்கி, மரங்கள் ஆடாமல் பிரமித்து நிற்க, வெயிலில் காய்ந்த மண் மணக்கும் சித்திரை மாதத்தின் மாலை கருத்துக்கொண்டிருக்கும் நேரத்தில் நான் விழுந்தேன்.

வேலைக்காரி மாட்டுத்தொட்டிக்குத் தண்ணீர் இழுத்து ஊற்றி விட்டுப் போய்விட்டாள். வேலைக்காரன் கவணைக்கு வைக்கோல் பிடுங்கி வைத்து விட்டுப் போய் விட்டான். கொட்டாய் வாயற்படியைத் தாண்டி இரண்டாம் கட்டிற்கு அவன் வரக்கூடாது.

உள் தாழ்வாரத்துத் தூணில் கட்டப்பட்டிருந்த ஊட்டுக் கன்றுக் குட்டிக்கு வைக்கோல் எடுத்து வைக்கவேண்டும். அதைக் கொட்டாயில் கட்ட முடியாது. மாடுகள் முட்டி விடலாம். அது இரவில் அவிழ்த்துக் கொண்டு ஊட்டி விடலாம். அதன் வாய்க்கு தன் மடி எட்டும்படி பசு திருப்பிக்கொண்டு நின்று பால் கொடுத்து விடலாம். அதற்குக் கவட்டுப் பசு என்றும் பெயர் இருந்தது.

கன்றுக் குட்டிக்கு வைக்கோல் எடுப்பதற்குப்பாட்டி கொல்லைப் போருக்குப் போனுள். சிரமம் இல்லாமல் கவணையில் இருந்தே எடுத்து வைத்திருக்கலாம். ஆனுல், புடவையைக் கண்டு சீறும் மயிலைக்காளைக் கொட்டகையில் இருக்கும். அதைத் தன்னு டைய கொட்டகையில் கட்டி வைத்துக்கொண்டிருப்பதை ஒரு பெருமையாக அப்பா கருதினுர். யார் வீட்டுக்கொட்டாயிலும் இல்லா அலாதியான குணம் உள்ள மாடு தன் கொட்டாயில் இருப் பது பெருமைதான். அது வண்டியில் பூட்டப்பட்டு வாசலில் நின்று கொண்டிருக்கும்போது தெருப்பெண்கள் வண்டியைக் கடந்து போகப்பயப்படுவார்கள். இதுவும் அப்பாவுக்கு வேடிக்கை யாகவும் பெருமையாகவும் இருந்திருக்கிறது.

அதற்குப் பயந்தே பாட்டி கொல்லை வைக்கோல் போருக்குப் போனுள். பின்னுலேயே நானும் கையில் ஒரு கந்தல் துணியை எடுத்துக் கொண்டு ஓடினேன். படலைத்திறந்து கொண்டு வைக்கோல் தொண்டியில் நுழையும்போது பாட்டி என்னைப் பார்த்து விட்டாள். "ஓடு ஓடு...... உள்ளே ஓடு. பூச்சுப்பொட்டு இருக்கும் உள்ளே ஓடு" என்று சொல்லிக் கொண்டு நின்ருள். நான் உள்ளே போகத் திரும்பினேனும். உள்ளே போய் விடுவேன் என்ற துணிச் சலில் பாட்டி வைக்கோல் போரை நோக்கிக் கிளம்பினுள். அவள் தலை மறைந்ததும் வாயிற்படிக்குப் பின்னுல் நின்றுகொண்டிருந்தவன் படியைத்தாண்டி கிணற்றடிக்கு வந்தேன்.

சகடையை இன்னும் கழற்றிக் கொண்டுபோய் இரண்டாம் கட்டில் வைக்கவில்லை. அது கிணற்றடியிலேயே இருந்தால் திருட்டுப் போய் விடும். கன்றுக்குட்டிக்கு வைக்கோல் கொண்டு வைத்த பிறகுதான் அதைக் கழற்றிக் கொண்டுபோவது வழக்கம். உடம்பில் படிந்த வைக்கோல் சுணையைக் கழுவிக் கொண்ட கையோடு பாட்டி அதை அவிழ்த்துக் கொண்டு போவாள்.

வாளி கிணற்றுத் தலையீட்டின்மேல் இருந்தது. அது வட்டத் தலையீடு அல்ல. சதுரத்தலையீடு. குள்ளமாகவும் அகலமாகவும் உட்கார வசதியாக கட்டப்பட்டிருந்தது. தாம்புக்கயிறு பக்கத்தில்

சுருண்டு கிடந்தது. தலையீட்டுக்குப் பக்கத்தில் துணி தோய்க்கும் கருங்கல் புதைக்கப்படாமல் ஆடாமல் அடியில் ஓட்டு ஜல்லியால் அணைப்புக் கொடுத்து வைக்கப்பட்டிருந்தது. வாளித் தண்ணீரில் என் கைத்துணியை நனைத்து கல்லில் தோய்க்க வேண்டும். எனக்கு வாளி எட்டவில்லை. தலையீட்டிலும் ஏறமுடியாது. கல்லில் ஏறி தலையீட்டில் நான் ஏறியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. வாளியில் தண்ணீர் இல்லை போலும். தண்ணீர் இல்லாமல் எப்படி துணி தோய்ப்பது ? வாளியில் விளையாடவாவது செய்யலாம் என்று எனக்குத்தோன்றியிருக்க வேண்டும். வாளிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டேன். மூன்று வயதுக் குழந்தை உட்கார்ந்தால் மறையும் அளவு பெரிய வாளி அது. வைக்கோல் போரில் இருந்து பாட்டி திரும்பும்போது ஒளிந்து கொண்டிருப்பது பாட்டிக்குத் தெரியக்கூடாது. பாட்டி வருகிறாளா என்று நான் எட்டிப் பார்த்திருக்கலாம். சகடை மாட்ட பாலம் போடக் கட்டிய சிமெண்டு தூண் பார்வையை மறைத்திருக்க வேண்டும். பாட்டி தெரிய தூண் மறைவைத் தாண்டிப் பார்வைபோக இன்னும் எட்டிப் பார்த்திருக்கக் கூடும். வாளியின் விளிம்பைப் பிடித்துக் கொண்டிருந்திருப்பேன். வாளி நொடித்துக் கிணற்றில் விழுந்தது. நான் வாளியில் இருந்து தனியாகத்தான் விழுந்திருக்க வேண்டும். அப்படி நேரவில்லை. வாளி என்னை உள்ளே தாங்கிக்கொண்டு கிணற்றில் இறங்கிற்று. விழும் நேரத்தில் நான் வாளியை இறுக்கிப் பிடித்துக் கொண்டு விட்டேன் போலும். வாளி தண்ணீருக்குப் போகும் வரையில் தாம்பு சகடையில் ஓடி மிச்சமுள்ள நழுவி என் மேல் விழுந் திருக்கிறது. முழுச் சுமையாக இன்றி பாதி என் மேலும் பாதி தண்ணீரிலுமாக விழுந்திருக்கிறது.

மாலை கருத்துக் கொண்டிருந்த போது இருண்டிருக்கும் கிணற்றின் மேலே இருந்து கிணற்றின் அடியைப் பார்க்க முடியாதது போல நினைவு இன்று இருண்டிருக்கிறது. நான் கிணற்றில் இருந்ததை லாந்தல் விளக்கில் கயிற்றைக் கட்டி உள்ளே விட்டுப் பார்த்தார் களாம். அதுவும் பாதியில் போய்க் கொண்டிருக்கும்போது சுடர் குதித்து அணைந்து விட்டது. பிறகு தற்செயலாக யாரோ கொண்டு வந்த டார்ச்சு விளக்கை அடித்துப் பார்த்தார்கள். நான் தாம்புக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு வாளிக்குள் உட்கார்ந்து கொண்டிருந் தேனும். அழுது கொண்டிருந்தேனு என்று தெரியவில்லை. எனக்குச் சிராய்க்க வில்லை. வாளி உள்ளே இறங்கும்போது விழுந்த வேகத்தில் பக்கத்தில் எங்கும் மோதாமலேயே இறங்கியிருக்கிறது. இறங்கிய வேகத்தில் இளம் இதயம் மேலே போவது போல உணர்ந்திருக்க லாம். இரவில் சமதரையென்று ஒரு சிராங்கைத் தண்ணீர் தேங்கும் சின்னக் குழிவில் உணராது காலை வைக்கும்போதும் மனம் அதிர்

கிறது. சமதரையில் காலை வைக்கச் செலுத்திய சக்திக்கு மேலே கால் சக்தியின்றி வீழ்கிறது. வீழ்ச்சி மூளையில் உதைக்கிறது. தோலுக்கு உள்ளே சதையில் ஏதோ ஒன்றின் சொற சொறப்பான மேல் புறத்தால் தேய்த்து சிராய்த்தது போல இருக்கிறது. மூன்று வயதில் இப்படி உணர முடியுமோ என்னவோ ?

பக்கத்து வீட்டுக் கிணற்றில் பற்றுக் கோலைப்பற்றி ஏற்றச்சாலை கிணற்றில் அமிழ்த்த கைச் சக்தியை பற்றுக் கோலில் முழு வேகத்தில் செலுத்தியபோது குறுக்குப்பாலத்தில் வைக்க வேண்டிய காலைத் தவறிக் கிணற்றின் வெற்றிடத்தில் வைத்துக் கிணற்றில் விழுந்திருக்கிறேன். அப்பொழுது உணர்ந்தேன். மனதில் சொரேர் என்றது. சிராய்த்தது போலிருந்தது. ஒன்றை மறக்க ஒன்று காரணமாகப் பல நிகழ்ந்து விட்டன. விலாவில் பாலம் சிராய்த்தது. உள்ளே அமுக்கிய ஏற்றச்சால் கை நழுவி மேலே எழும்பி முகத்தில் மோதிச் சிராய்த்தது. விழும்போது இடையில் ஓர் உரையின் படியில் தலைமோதிற்று. மயிரும் சதையுமாக அங்கு ஒட்டிக் கொண்டிருந்தது. அப்பொழுது நிறையத் தண்ணீர் உள்ள கிணற்றில் விழுந்தேன். சிராய்ப்பின் காயத்தில் தண்ணீர் பட்டு எரிச்சல் கண்டது. வாளியில் உட்கார்ந்து விழுந்ததில் சிராய்க்க வில்லை, ஆயினும் விழுந்த வேகத்தில் வாளி கிணற்றின் தரையில் மோதியிருக்கும். தரையில் மோதும் முழு அதிர்ச்சியை ஊறியிருந்த கொஞ்சத் தண்ணீர் தடுத்திருக்கலாம். இருந்தாலும் அதற்குண்டான அதிர்ச்சியை அடைந்திருப்பேன். குறுகிய இடத்தில் திரண்ட இருளைக் கண்டு பயந்து போனேனோ என்னவோ ? மேலே நனைந்த தாம்புக் கயிற்றின் சுமை. விழுந்த வேகத்தில் தெரித்த தண்ணீர் நனைத்திருக்கும். பக்கத்தில், ஆழம் இல்லாவிட்டாலும் தண்ணீர் அதிர்ச்சியில் நினைவிழந்து மயங்கிக் கிடந்திருப்பேன். அல்லது நினைவோடு அதிர்ந்து குன்றி வாளியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பயத்தோடு உட்கார்ந்து கொண்டிருந்திருப்பேன். என்னை வெளியில் எடுக்க நீண்ட நேரம் ஆயிற்று. நான் கிணற்றில் இருப்பதைக் கண்டு பிடிக்கவே நேரமாயிற்று. நான் கிணற்றில் விழுந்தது பக்கத்து வைக்கோல் போரில் இருந்த பாட்டிக்கே தெரியவில்லை.

மயிலைக்காளைக்குப் பயந்து போருக்குப் போன பாட்டி அங்கே நின்று கொண்டிருந்த அதனிடம் அகப்பட்டுக் கொண்டாள். வேலைக்காரன் அதைப்பிடித்துக்கட்ட மறந்து விட்டான் போலிருக்கிறது. அல்லது அது கொட்டாயில் இருந்து அவிழ்த்துக் கொண்டு வந்திருக்கலாம். அவளைக் கண்டதும் சீறி துரத்திக் கொண்டு வந்தது. படலை நோக்கி அவளால் திரும்பி ஓடி வர முடியவில்லை. மறைவில் நின்று கொண்டிருந்த அதைக் கவனிக்காமல் பாட்டி போரின் மேல்

கையில் வைக்கோல் பிடுங்க ஆரம்பித்தாள். அது கீழ் கையில் நின்றிருந்தது. வைக்கோல் பறிக்கும் சப்தம் கேட்டு அது தென் கைக்கு வந்தது. பாட்டியைக் கண்டு முட்டத் தலையைக் குனிந்து சீறிற்று. பாட்டி அதைப்பார்த்து விட்டு வடகைக்கு ஓடினாள். அது பின்னால் துறத்திற்று. பாட்டி போரைச் சுற்றிக் கொண்டே இருந்தாள். தெற்கே படலை நோக்கி ஓட வழியின்றி விளையாட்டைப்போல அது பாட்டியைத் தொடர்ந்து துறத்திற்று. பாட்டி வைக்கோல் பிரியைப் பற்றிக்கொண்டு போரில் ஏறிக்கொண்டாள். அது அவளைப் பார்த்துக் கொண்டே வடகையில் நின்று கொண்டிருந்தது. போரின் மேலேயே மெல்ல நிதானித்து அவள் தென்புறம் வந்தாள். போர் ஆடிற்று. அது அங்கேயே நின்று கொண்டிருந்தது. அவள் வைக்கோலோடு மெல்ல தென்கையில் சரிந்தாள். வைக்கோலும் சரிந்து பாட்டியின் மேல் கவிழ்ந்து கொண்டது. அது ஓடி வந்து வைக்கோலோடு சேர்த்து பாட்டியை முட்டிற்று. வைக்கோலுக்குள் இருந்தாள் அவள். பாட்டியின் பயம் முற்றிப் பழுத்தது. அதுவே அவள் பயம் உதிரக் காரணமும் ஆயிற்று. அதன் முட்டலுக்குப் பயந்தாள். அது நடந்து விட்டது. இனிமேலும் தொடர்ந்து நடக்கப் போகிறது. நின்ற இடத்தில் நடப்பதைக் காட்டிலும் ஓடிக் கொண்டே அது நடக்கட்டும் என்ற முடிவுக்கு வந்தாள் அவள். அதனால் வாங்கும் முட்டலின் எண்ணிக்கை குறையும். ஓடத் தொடங்குவதையும் ஓட்ட வேகத்தையும் பொருத்து இன்னும் குறையும். உடனே வைக்கோலோடு சுருட்டிக்கொண்டு எழுந்து ஓடினாள். அது முட்டிக் கொண்டே ஓடி வந்தது. படலுக்கு அந்தண்டை போய் படலைச் சாத்திக் கொண்டாள். முழு உடலும் படலுக்கு வெளியில் வரவில்லை. பாதியில் மாட்டிக் கொண்டது. அத்துடன் விட்டு விட்டு பாட்டி கிணற்றைத் தாண்டி ஓடினாள். அது படலில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வெளிவர நேரம் பிடித்தது. அதற்குள் பாட்டி கொல்லை வாயற்படியைத் தாண்டி கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டாள், பாட்டிக்கு மேல் மூச்சு வாங்கிற்று.

"வித்துத் தொலைடான்னு கேக்கருனா? பார் உசிரை வாங்கட்டும்னுகாத்திண்டிருக்கானே?" என்று பாட்டி தாழ்வாரத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். அம்மா வாயில் திண்ணைக்கு வைக்க விளக் கேற்றிக் கொண்டு போனாள். "அதே இன்னும் காணுமே. மொளைச்சு மூணு இலை ஆகலே. அதுக்குள்ளே ஊர் சுத்த ஆரம்பிச் சுடுத்தே. எங்கே தொலைஞ்சுதோ" என்று சொல்லிக் கொண்டே போனாள். நான் பாட்டியோடு கொல்லைப் பக்கம் போனதை அவள் கவனிக்கவில்லை.

அவள் தன்னைக் கவனிக்கவில்லை என்று பாட்டிக்குக் கோபம். "அப்பனேப் போல இப்பவே தயாராயிண்டு இருக்கு" என்று தலையில்

கையை வைத்துக் கொண்டு இன்னும் வசதியாக சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். 'பூச்சி பொட்டு' என்று தான் சொன்னதற்கு நான் பயந்து உள்ளே திரும்பி வாசலுக்குப் போய் இருக்க வேண்டுமென்று அவளும் நம்பினுள்.

அம்மா திண்ணையில் விளக்கு வைத்து விட்டுஎன்னைத் தெரு வில் தேடிவிட்டு வந்தாள். "அதைக் காணலே. யார் வீட்டிலே போய் உட்கார்ந்துண்டிருக்கோ" என்று பாட்டியைப் பார்த்து "கிணத்து வாளியே எடுத்துண்டு வந்தேளா?" என்று கேட்டாள். அப்பொழுதும் பாட்டிக்குச் சந்தேகம் வரவில்லையாம். என்னைக் காணவில்லை என்பதையும் கிணற்றையும் தொடர்பு படுத்திப் பார்க்க முடியாமல் மயிலைக் காளையால் அதிர்ந்து உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு அம்மாவின் மேல்தான் கோபம் வந்தது.

"எங்கே எடுத்துண்டு வரது. ஒன் ஆம்படையான் வாங்கிக் கட்டி வைச்சிருக்கானே சிவஞேட ரிஷப வாகனம் அது எமன் வாகனமா வாளிக்கிக் காவல் காத்துண்டு நிக்கறது. வாளியே யார் தூக்கிண்டு போயிடப் போரு. பொம்பிளை யாரும் வரமாட்டா. ஆம்புள்ளே தான் வரனும். அதுக்கு இன்னும் இருட்டனும். கவலேப் படாதே" என்ருள் பாட்டி.

"அவரும் இல்லே. வாசல்லே யாரானும் போருரான்னு பார்க்கறேன்" என்று அம்மா வாசலுக்குப் போனுள்.

தரகன் கண்ணுசாமி கிழக்கே போய்க்கொண்டிருந்தான். மாடு வாங்குவதிலும் விற்பதிலும் அப்பாவோடு நெருங்கிய தொடர்பு கொண்டவன். அவனுக்கு ஹைட்ரோஸெல். நீண்ட தூரம் நடக்க முடியாது. எங்கும் அப்பாவோடு வண்டியில் ஊர் சுற்றிக் கொண்டிருப்பான்.

"கண்ணுசாமி அய்யாவோடே நீ செம்பனூர் கோயில் போகலியா?" என்ருள் அம்மா. 'உள்ளே வேலை இருக்கு வந்து விட்டுப் போ' என்பதின் மாற்றுக் கேள்வி அது.

அவனுக்குத் தெரியும். "இல்லீங்க. வேலே இருந்துது. இன்னும் வல்லீங்களே" என்று அவனும் படியேறி வந்தான்.

"அய்யாவும் நீயும் நன்னு மாடு வாங்கறீங்க. மயிலைக் காளே கிணத் தடியிலே நின்னிண்டு இருக்கு. புடுச்சு கட்டிட்டுப் போ" என்று அவனுக்கு வைத்த வேலையை நியாயப் படுத்தினுள்.

அவன் உள்ளே வந்தான். "என்ன பெரியம்மா இருட்டிலே ஒக்காந்துக் கிட்டிருக்கீங்க ?" என்று சொல்லிக் கொண்டே முற்றத்தில் இறங்கினன்.

தாழ்வாரத்து வாரியில் தொங்கிக் கொண்டிருந்த லாந்தரின் அடி நிழலில் பாட்டி உட்கார்ந்து கொண்டிருந்தாள். "அந்த எமனே தொலேச்சு தலே முழுகிட்டு இந்த வீட்டுப் படியேறு. ஆமான் சொல்லிட்டேன்" என்ருள்.

"பெரியம்மா ரொம்ப கோவமா இருக்காங்க போல இருக்கு" என்று சிரித்துக் கொண்டே முற்றத்தில் நின்ருன் கண்ணுசாமி.

"இன்னிக்கி என் உயிரே வாங்கப் பாத்தது. போரோடே சேத்து வைச்சு தேய்ச்சுடுத்து. கோவம் வராமே என்ன பண்ணும் பின்னே"

அவன் கொல்லேத் தாழ்வாரத்தில் ஏறினன்.

"கையோட ஒரு பன்னல் வைக்கல் சுருட்டிட்டுவா."

அவன் இரண்டாங் கட்டில் போய்க் கொண்டிருக்கும்போது அடுப்பங் கரையில் இருந்து "கண்ணுசாமி, அப்படியே கிணத்து வாளியே இழுத்துண்டு வந்துடு" என்ருள் அம்மா.

"சரிங்க" என்று அவன் போனன்.

மாட்டைப் பிடித்துக் கட்டி விட்டு கன்றுக்குட்டிக்கு வைக்கோல் சுருட்டிக்கொண்டு வந்தான். "கிணத்திலே வாளியே காணலிங்களே. சகடை மட்டும் இருக்குங்க. கிணத்துலே விழுந்திட்டுதுபோல இருக்குங்க" என்ருன்.

இப்பொழுது தான் பாட்டிக்கு என்னேயும் கிணற்றையும் சம்பந்தப்படுத்திப்பார்க்க முடிந்ததாம். தாழ்வாரத்தில் இருந்து "பாவி... குழந்தே கிணத்திலே விழுந்துடுத்து போல இருக்குடா" என்று எழுந்து ஓடினளாம். அம்மா "ஐயோ என் கண்ணே" என்று பின்னல் ஓடினளாம். கண்ணுசாமி லாந்தரை எடுத்துக் கொண்டு பின்னல் போனன்.

அதற்குள் செய்தி தெருவில் பரவிற்று. தெருவில் இருந்து சாலேக்குப் போயிற்று. தனக்கு முன்பே தெரியுமென்று எல்லோரும் ஓடி ஓடிச் செய்தியைப் பரப்பினர்கள். கவணேக்கு வைக்கோல்

வைத்து விட்டுப் போனவன் சாலைக் கடையில் வெற்றிலை வாங்கிக் கொண்டு புகையிலைக் காம்புக்கு பிசுகிக் கொண்டு நின்ருன். அவனிடம் "ஓங்க அய்யாவூட்டுக் கொழந்தே கொளத்திலே விழுந்துட்டுது" என்று யாரோ முந்திக் கொண்டு செய்தியைச் சொன்ஞர்கள். நல்ல வேளையாக புகையிலைக் காம்புக்கு பிசுகிக் கொண்டு நின்ருேமே என்று அவன் மகிழ்ந்தான். அப்பாவுக்குச் செய்தியைச் சொல்ல செம்பஞர் கோயிலை நோக்கி ஓடிஞன். என்னை கிணற்றிலிருந்து எடுப்பதற்கு முன்பாகவே அவன் அப்பாவுக்குச் செய்தியை சொல்லி விட்டாஞம். அப்பாவோ என்னைக் கரையேற்றும் நேரத்தில் கிணற்றடிக்கு ஓடி வந்து விட்டாராம். அவ்வளவு வேகமாக அவன் ஓடிஞன் என்று புஞ்சையில் கதை கதையாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

இரண்டு கால்கள் உள்ள மனிதன் எவ்வளவு வேகமாக ஓட முடியும்? நான்கு கால்கள் உள்ள குதிரையா அவன்? அதைவிட வேகமாகச் சுழல சக்கரமா? அதற்குப் பல ஆரக்கால்கள். அவன் அதிக பட்சம் நான்கு கால்களாக்கிக் கொள்ளலாம். இரண்டு கைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். மிருகம் போல் இன்றி சக்கரம் போல் ஆரக்கால்களாக்கிக் கொள்ள வேண்டும். அதற்குக் கரணம் தான் அடிக்க வேண்டும்.

இன்றும் அவன் என் கண் முன் ஓடிக் கொண்டிருக்கிருன். மேஜை மின் விசிறியின் இதழ்களைப் போல அவன் கை கால்கள் தோற்றம் இழந்து பின்ஞேக்கிச் சுழலும் பிரமை தருகின்றன. தலை மட்டும் விசிறியின் குமிழ் போலத் தோற்றம் காட்டி நடுவில் சுழல்கிறது. சாலை மரங்கள் ஒன்ருேடு ஒன்று மோதிக் கொண்டு தலை தெறிக்கும் வேகத்தில் புஞ்சையை நோக்கி ஓடுகின்றன. சாலைப் பக்கத்துத் தோப்புகள் சுழன்று திசை மாறப் பார்க்கின்றன. வாழைத் தோட்டங்கள் மயங்கி பச்சை நிறத்தில் ஒரேயடியாய் வீழ்கின்றன. அவனை அச்சாகக் கொண்டு காட்சிகள் எல்லாம் சுழல்கின்றன. இடமும் வலமும் அரை வட்டத்தில் எதிர்த் திசையில் சுழன்று அவனுக்குப்பின் தங்கி நிலைக்கின்றன.

ஓடிய வேகத்தில் அவனுக்கு நாயைப் போல இரைத்ததாம். அவஞல் செய்தியைச் சொல்ல முடியவில்லையாம். அவன் எங்கள் குடும்பத்திற்கு மாடாக உழைத்தவன். நாயைப் போல நன்றியுள்ளவஞக இருந்தான். நாயின் நாக்கைப் போல அவனுக்கு மனித ஊத்தை படியாத நாக்கு. இரைத்தால் நாயைப் போல நாக்கில் உமிழ் நீர் ஊறிச் சொட்டாமல் நாக்கு வரண்டதால் அவன் மனிதஞகவே இருந்தான். மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்ட நாக்கைப் பிய்த்துப் பேசிஞன்.

"கொழந்தே கிணத்துலே விழுந்துட்டுதுங்க"

"எங்கே...எங்கே" என்று உட்கார்ந்திருந்த கடையிலிருந்து எழுந்து ஓடி வந்தார் அப்பா.

இரைப்பால் அவனுக்கு விலா எலும்புகள் மேலே ஏறி ஏறி இறங்கின. பேசத் திணற வேண்டியிருந்தது. ஈரம் வரண்ட நெஞ்சில் சொல் சிக்கிக் கொண்டு விட்டது. எச்சிலைக் கூட்டி விழுங்கித் தொண்டையை ஈரமாக்கிக் கொண்டு பேச நினைத்தான். வாயிலோ எச்சில் ஊறவில்லை.

அவனால் பேச முடியாது என்பதை அப்பா உணர்ந்து கொண்டார். "பூட்டு பூட்டு வண்டியே பூட்டு" என்றார்.

கடைக்கு எதிரில் புங்க மரத்துக் கடியில் கட்டியிருந்த மாடுகளை அவிழ்த்து வண்டியில் பூட்டினான். அவர் தலைக் கயிற்றைத் தன் கையில் வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறி அமர்ந்தார். அவனை எதிர்பாராது வண்டி கீழ் முக்கூட்டைத் தாண்டி காவிரிப்பூம்பட்டினத்துச் சாலையில் புஞ்சையை நோக்கி ஓடிற்று.

கண்ணுசாமி வாங்கிய மாடுகள் அவை. அப்பாவின் கையில் பழகிய மாடுகள். அவர் மன உணர்வை அவை கை தலைக் கயிற்றின் மூலம் மூக்கணாங் கயிற்றில் முகர்ந்து உணர்ந்து கொண்டன போலும். 'நான்கும் நான்கும் எட்டுக் கால்கள். ஆரக்கால்கள் வேறு. இன்னும் வேகமாய் ஓடலாம்; ஓடுவோம்' என அவை ஓடின. பின் குளம்பு வளைந்து மண்ணை வாரி சக்கரத்தில் அடித்துக் கொண்டோடின. தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஓடுவது நல்ல மாட்டின் இலக்கணம் இல்லையென தலை நிமிர்ந்து வாயில் வெண் நுரை தள்ள ஓடின.

கண்ணுசாமியால் ஓட முடியாது. இரண்டாம் கட்டில் கிடந்த வரி கயிற்றை எடுத்துக் கொண்டு நிதானமாகக் கிணற்றடிக்குப் போனான். கிணற்றில் எப்படி இறங்குவது என்பதை முதலிலேயே திட்டமிட்டுக்கொண்டு விட்டான். அவனால் பக்கத்தில் கால்களை அகட்டி வைத்து இறங்க முடியாது. வரி கயிற்றைப் பிடித்து உருவிக் கொண்டே கிணற்றில் இறங்குவதென முடிவு செய்து கொண்டான். கிணற்றடியில் அம்மாவும் பாட்டியும் அலறிக் கொண்டு நின்றார்கள். கைலாந்தரைக் கிணற்றில் காட்டி அதன் அடியைப் பார்க்க முடியவில்லை. அம்மாவை சணற்கயிறு கொண்டு வரச் சொல்லி விட்டு வரி கயிற்றை சகடை மாட்டும் கட்டையின் நடுவில் கட்டி விட்டு முனையை மெதுவாக கிணற்றில் தொங்க

விட்டான். கயிறு என்மேல் சுமையாக விழுந்து விடாமல் எச்சரிக்கை யாக இருந்தான். அதற்குள் அம்மா சணற்கயிறு கொண்டு வந்தாள். லாந்தரை அக்கயிற்றில் கட்டி அம்மாவிடம் கொடுத்து மெல்ல உள்ளே விடச் சொல்லி விட்டு வரி கயிற்றைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் உருவிக்கொண்டே இறங்கினுன். அவனுக்குப் பின்னுல் லாந்தரும் கிணற்றில் போயிற்று. பாதியில் அணைந்து மீண்டும் கிணற்றில் இருள் சூழ்ந்தது. அதற்குள் கிணற்றைச் சுற்றிப் பலரும் கூடி விட்டார்கள். கையில் டார்ச் விளக்கு கொண்டு வந்திருந்த ஒருவன் கிணற்றில் வெளிச்சம் அடித்தான். நான் வாளியில் இருந் தேன். கண்ணுசாமியும் சறுக்கிக் கொண்டு கிணற்றடிக்கு வந்து விட்டான். ''கொழந்தே உசிரோட இருக்குங்க... கொழந்தே உசிரோட இருக்குங்க'' என்று கத்தி விட்டு என்னைத் தூக்கிக் கொண்டாஞம். அவன் கைகள் வரி கயிருல் அறுபட்டுப் புண்ணுகி விட்டன. அவன் உதிரம் என்மேல் வழிந்தது.

இனிமேலே எப்படித் தூக்குவது ? வாளியில் கட்டி இழுத்தால் இடையில் தவறி மீண்டும் விழுந்து விடலாம். கண்ணுசாமியும் தாஞக மேலேறி வர முடியாது. இரண்டுபேரையும் தூக்க வேண்டும்.

பெரிய ஏற்றச்சால் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அதன் காதில் வலுவான நான்கு வரிசையிலும் கட்டி கிணற்றில் விட்டார் கள். என்னைத்தூக்கி மடியில் வைத்துக் கொண்டு கண்ணுசாமி ஏற்றச் சாலின் நடுவில் ஆடாமல் உட்கார்ந்து கொண்டான். தலை யீட்டின் நான்கு மூலைகளில் நான்கு பேர் நின்று கொண்டு ஏற்றச்சால் ஆடாமல் மேலே தூக்கினுர்கள். நாங்கள் மேலே வந்து விட்டோம்.

செம்பனூர் கோயிலில் இருந்து அப்பாவும் வந்து விட்டார். என்னை வாங்கிக் கொண்டார். என்மேல் வழிந்த ரத்தத்தைக் கண்டு அவர் பயந்து விட்டாராம்.

''கண்ணுசாமி அண்ணன் கை ரத்தங்க'' என்று கூட்டத்தில் எவனே சொன்னும்.

ரத்தம்வடியும் வெலவெலத்த கை நடுங்கிக் கொண்டு நின்றிருந்த கண்ணுசாமியைப் பார்த்து அப்பா ''கண்ணுசாமி என் பிள்ளையே காப்பாத்தினே. இனிமே நான் இருக்கும் வரைக்கும், ஒனக்கு ஒரு மாசம் ஒரு கலம் நெல்'' என்ருராம்.

கூடி நின்று இருந்தவர்கள் எல்லோரும் அப்பாவைப் பாராட்டி இருக்கிருர்கள். கண்ணுசாமி பலவீனமாகச் சிரித்திருக்கிருன். அவன் இறக்கும் வரைக்கும் தான் கிணறு இறங்கிய அனுபவத்தை எனக்கு கதை கதையாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனிட மிருந்து தப்பித்தால் போதும் என்று நானும் ஓடியிருக்கிறேன்.

தீக்கை

ப. சாமி

சேலத்தின் மையத்தில் கடைத் தெருவுக்கு இணையாக, கிழக்கு மேற்காகக் கிடக்கும் முதல் அக்ரஹாரத்தில் இருபுறமுள்ள கடைகளையும் ஒரு வழிப் பாதையானதால் எதிரே மட்டும் வருகின்ற வண்டிகளையும், முன்னுல் எதிர்படும் கும்பலையும் கவனியாது, கடல் நடுவே தனித்த மரக்கலமாக மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தான் கிரி. இப்போது அவன் விழித்த கண்ணிருந்தும் குருடன்; திறந்த செவியிருந்தும் செவிடன்; ஐம்புலனும் ஒடுங்கி ஒரு முனைப்பட்ட சித்தன்.

அவனது சிந்தனை நெய்தது; அதில்தான் அவனுடைய முழுக் கவனம். பல வர்ண இழையும் பாவும்; பலவகை நெசவு; அதனுல் பல விதக் கோலம்.

சரியாக ஓராண்டு ஆயிற்று. அன்று இதே மாலை வேளையில் இதே வழியில் வேதாசலத்துடன் சுற்றியுமுள்ள ஈசலுக்கும் பட்டுப் பூச்சிக்கும் மலருக்கும் கொடிக்கும் தனது கவனத்தை நல்கி அவற்றைச் சுவைத்தபடி நடந்து கொண்டிருந்தான். இலக்கியத்திற்கும் நெறிக்குமுள்ள தொடர்பு பற்றிய சுவையான உரையாடல்; உரையாடல் என்பதைவிட வாதம் என்றே சொல்லலாம்; கும்பல் சூழ்ந்த நடுத்தெரு என்பதையும் மறந்து சற்று உரக்கவே ஒலித்தன அவர்களுடைய குரல்கள். இது முக்கியமல்ல; இது இப்போதுதான் நினைவில் தட்டுகிறது. முக்கியமானது வேறு.

அதை முக்கியமானது என்பது தவறு. அது ஒன்றுதான் இந்த 365 நாட்களும், உறங்கும்போது கனவிலும், விழித்தபோது நினைப்பிலும், பாடம் நடத்தும்போதும், குளிக்கும் போதும், உண்ணும் போதும், திடீர் திடீரென்று கறுத்த வானத்தில் கிழித்து விழும் எரிகல்லாய் ஒளிர்ந்து ஒளிர்ந்து கீறியபடி இருந்தது. அது நிகழ்ந்த பிறகு ஏதோ ஒரு மாறுதல்; மழையில் மிக நனைந்ததால் பாதிக்குமேல் சுருங்கி விட்ட சட்டையில் உடல் படும் தொல்லையை மனம் பட்டது. இந்த வயதில் கண்ணுக்குக் குளுமை தந்து உள்ளத்துக்கு வெம்மை யூட்டும் காட்சிகள் இலையுதிர்காலத்து பூங்கொடிகள் போல சட்டென்று தமது கவர்ச்சியைக் களைந்து விட்டன. அவற்றில் அவனுக்கிருந்த தொலைநோக்கி முனைப்பும் ஒடிந்து விட்டது. அவனும் கூந்தலிருந்தும் மொட்டையானுன்; அண்மைப்பாணி உடையிருந்தும் காவியின் நோக்கைப் பெற்றுன். உடுக்கையும் வாளும் மலரும் மொட்டும் விழியில் பட்டால் கூட விழித்திரை பதிய வைக்கத் தயங்கியது; மூளை வாங்கிக் கொள்ள மறுத்தது.

அதற்குப் பிறகு காது மந்தமாகவே இருந்தது. ஏதோ ஒரு விதமான துளையொலி காதிலே, சில வேளை மெல்லெனவும் சிலவேளை விண்ணெனவும் இடையீடில்லாத ஒத்து போல இழைந்தபடியே இருந்தது.

சிவபெருமான் ஒரு பாதியை உமைக்குத் தந்தது போல அவன் அதற்குத் தந்தான்; ஆனால் அவன் தந்தது பாதியல்ல; முழுமை— முழு உடலும் மனமும்.

365 நாட்கள் அவனுக்கு அது சரியாகப் பிடிபடவில்லை. அதை முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்னும் ஆசையில் அதே சூழலில் அதன் நடப்பு வண்ணம் கண்டு தெளியச் சென்று கொண்டிருந்தான். ஆனால் இன்று வேதாசலம் இல்லை; அவனுக்கு இன்னும் விடுமுறை விடவில்லை. அதுவும் நல்லதுக்குத்தான். தனியாக இருக்கும்போது கவனச் சிதைவின்றி ஆழமாக அகத்தில் மூழ்கலாம். முத்து கிடைக்குமா இல்லையா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கிரி நாத்திகன் அல்ல; என்றாலும் அவன் கோவிலுக்குப் போனதெல்லாம் சில முறைதான். அவனுடைய தந்தை உயிருடன் இருந்தபோது, சில ஆண்டுகளுக்கு ஒரு முறை ஈசுவரன் கோயில் சர்க்கரைப் பொங்கலும் புளியோதரையும் நினைவுக்கு வந்ததும் தனது குடும்பத்துடன் கோவிலுக்குச் செல்வார்; அவரோடு போனதுதான்; அவர் இறந்த பிறகு அவன் அங்கு போனதில்லை; தேர்நிலையத்திலுள்ள ராஜகணபதி கோவிலை வழியில் செல்லும்போது தெருவிலிருந்தபடி, கடைவிழியால் மட்டும் அல்லது கடை விழியில் சதைப்பற்று கிடைத்ததும் நேர்விழியாலும் பார்த்ததுடன் சரி.

அன்று, 365 நாட்களுக்கு முன்பு, முடிவு கட்டிய சினிமா நிகழ்ச்சியை நீக்கி விட்டு, ஈசுவரன் கோவிலுக்குச் சென்றால் என்ன என்று தோன்றிற்று. இந்தத் திடீர் தோற்றத்திற்குக் காரணம் புரியவில்லை. இதை வேதாசலத்திடம் சொல்லவும், அவன் 'ஏன் திடீரென்று' என்று கேட்கவும், 'ஏனோ' என்றான். இது தோன்றாமலே இருந்திருந்தால், தோன்றியதைச் சொல்லாமலே இருந்திருந்தால், ஐம்பத்திரண்டு வாரமாக சிலந்தி போல தனது கழிவுப் பொருள் கொண்டு பயனற்ற எண்ணவலை பின்னியிருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது. பட்டுப்பூச்சிபோல மெல்லிய பளபளப்பான பட்டு இழைத்திருக்கலாம். நீண்ட பெருமூச்சு ஒன்றை இழுத்து சில விநாடிகள் நிறுத்திக் கொண்டான். இன்று கூட 'ஏனோ' என்பதைத் தவிர வேறு காரணமே அகப்படவில்லை.

முதல் அக்ரகாரத்திற்கு இணையாக சற்றே தள்ளி ஓடுகின்ற திருமணிமுத்தாறு சென்னையிலுள்ள கூவம் போன்றது. இந்த ஆற்றின் வடகரையில் கூப்பிடு தூரத்தில் உள்ளது சுகவனேசுவரர் ஆலயம். முதல் அக்ரகாரத்தில் மேட்டுத்தெரு திருப்பத்தை நெருங்கிய இருவர் பார்வையில் கோவிலின் கோபுரம் தெரிந்தது. சரி என்று சொல்வது போல நேராகச் செல்லாமல் வலது பக்கம் திரும்பி மேட்டுத்தெருவில் நுழைந்தான் வேதாசலம். பின்னுல் நடப்பதை முன்னுல் அறிந்து அஞ்சியவன் போல கொஞ்சம் தயங்கிப் பின் தொடர்ந்தான் கிரி.

அன்று வெள்ளிக்கிழமை. எனவே தேர்ந்த உடையணிந்த மகளிர் கூட்டம் அதிகம். கோவிலுக்கென்றே வருவோரும், கோவில் சாக்கிட்டுச் சினிமாவுக்குச் செல்வோரும், வழிபாட்டுக்குப் பிறகு சினிமா பார்க்க விரைவோரும் என நல்ல கூட்டம். இந்த கூட்டத்தைக் காண்பதற்கென்றே வட்ட மிடும் கலையா உடை அணிந்த ஆண்கள் வேறு. கும்பலுடன் கலந்து நடந்தனர் கிரியும் வேதாவும், பேசாமல்.

இருவரில் யாரும் டான் ஜுவான் அல்ல; தான் இசைக்க முடியாத அபூர்வ ராகத்தை மீட்டுவதற்கு ஆசைப்பட்டு வீணையை மாற்றிக் கொண்டே இருக்கும் மூன்றுந்தரக் கலைஞன் அல்ல; ஏனென்றுல் இன்னும் இசைத்ததே இல்லை. அதனுல் வீணையை ஆர்வத்துடன் நோக்கக்கூடாது என்றோ, வீணையின் வளைவையும், தண்டையும், குடத்தையும், நரம்பையும் விழித்து ரசிக்கக் கூடாது என்று எங்கே சொல்லி இருக்கிறது? ஓங்கிய நாகரிகமும் உரத்த ஒப்பனையும் கள்ளப்பார்வையும் பெண்ணுக்குக் கிட்டிய பிறகு எங்கேயாவது சொல்லி இருந்தால்தான் என்ன?

விழிக்கிருந்த வேலையின் மிகுதியால் நாக்குக்கு வேலை தரவில்லை வேதா. கிரியைப் பொறுத்தவரை அப்படிச் சொல்வது முற்றிலும் சரியாகாது. அவனது மூளையின் ஒரு பகுதி விழித்திரையில் விழுந்த படங்களின் நினைப்பில்லாமல் வேறு எதிலோ மிகவும் சுறுசுறுப்பாகத் திளைத்திருந்தது.

கோவிலை ஒட்டி சற்றே நீண்ட சன்னதித் தெருவின் மேற்கு மூலையிலிருந்த சிறு கடையில் கொஞ்சம் கற்பூரம் மட்டும் வாங்கிக் கொண்டு செருப்பைக் கடையருகே விட்டுக் கொண்டிருந்தனர் இருவரும். முதலில் முடித்த வேதா திரும்பினுன்; அவன் விழிகள் விரிந்தன. இன்னும் திரும்பாத கிரி காந்தப் படலம் ஒன்று தன்னைச் சூழ்ந்து வளைப்பது போல் உணர்ந்தான். மிக மிக மென்மையான

தாழைமணம் நாசியில் நிறைந்தது. மோகனத்தின் ஆரோகணம் செவியில் இழைந்தது. வெட்கச் சிவப்பு வர்ணத்தில் வட்ட நிலவு ஒன்று அவனது இதயத்தில் உதித்தது.

சில அடிகள் தள்ளி, தன்னைக் கடந்து செல்கின்ற ஒரு மங்கையும் அவளுடைய தாயாக இருக்கக் கூடியபடி வயதான ஒருத்தியும் வேதாவுக்குத் தெரிந்தனர்; அவன் இளமைக் கொலுவையே பார்த்தபடி இருந்தான்.

புதுமையான உணர்ச்சிகளின் காரணமறியாத கிரி, காரணம் நாடித் திரும்பினான். வேதாவினுடைய முகத்தின் கோணம் கிரிக்கு வழி காட்டியது. ஐயோ! உறுப்பின் உணர்வு கடந்த முழுவுருக் கோட்டு வடிவு கிரியின் விழியில் நுழைந்தது, திரையில் விழுந்தது, மூளையில் பதிந்தது. தாமரை இதயம் உடுக்கையாய் மாறியது; பிறகு சிலிர்த்தது. ஐயோ, இவள் வடிவென்பதோர் அழியா அழகுடையாள் என்று கூவத் தோன்றியது. செதுக்கிச் செய்ததல்ல, வார்த்து வடித்ததுதான் இவள் வடிவு என்று முடிவு கட்டினான். பார்வைக்குப் பளிங்கின் திண்மை தெரிந்தாலும் தொட்டால் வெண்ணெயின் வெண்மைதான் புலனாகும்; தொட்டால் நாதசுரத்தின் உறைப்பின்றி குழலின் சீர்மைதான் தெரியவரும் என்று எதிர்பார்த்தான்.

அந்த நேரத்திலிருந்து வேதாசலம்—அவனைப் பொறுத்த வரை—மறைந்து போனதை எண்ணிய கிரியின் இதழ்கள் முறுவலில் நெளிந்தன. சுமார் இருபது ஆண்டுகள் ஆழப்படுத்திய உறவு, சிலகணப் பார்வை மாயத்தில் கரைந்து போனது அவனுக்கு வியப்பாக இருந்தது.

விண்ணோர் அமுதம் கொண்டோ வகுத்தான் இவள் மெய் எங்குமே என்று கேட்கச் செய்யும் அந்த வடிவு, இப்போது கூட விழியை நிறைத்தது. வெள்ளிப்பூ மின்னும் ஈரச்சாம்பல் நிறத்தில் செயற்கைப் பட்டுச் சேலை; அதே சேலைத் துணியில் சோளி; முருகிற் சிவந்த ரோஜாவும் முதிரா இளைஞர் ஆருயிரும் திருகிச் சொருகிய கூந்தல்; வளையலாடும் மணிக்கட்டு வரை தாழ்ந்து, நுனியில் ரிப்பன் இணைக்காமல் புரிபிரிந்து இழைநீந்தும் சடை இரண்டு; இரண்டு 'அர்த்தசந்திர'க் கைப்பிடிப்புக்குள் அடங்கும் சிறுத்த இடை; அங்கிருந்து அவரோகணிக்கும் கிளர்ந்த முகட்டுக் குறங்கு; அதிலிருந்து கவைத்து நீண்டு, மடிப்புடன் புரளும் சேலை விளிம்பின் கீழ் வெண்ணிறக் காலணி வழியே எட்டிப்பார்க்கும் சிறு விரலடியில் முடியும் கால்கள்; வலக்காலடி நிலத்தில் பதிய இடக்காற்குதி மட்டும் செருப்பிலிருந்து பிரிந்தெழும் தாள நயம்; சந்த நடைக்கிசைய குறங்கின் அசைவு, இடையின் நெளிவு, சடையின் ஆட்டம்.

அவனுடைய விழி சடையின் ஆட்டத்திற்கு ஏற்றபடி செவிக்கும் நாசிக்கும் ஓடி விளையாடியது கூட இப்போதுஅவனுக்குத் தெரிந்தது. இடுப்பை இறுக்கிச் சுருங்கிய சேலைக் கட்டுக்கும், ஒட்டிய சோளி முடிவுக்கும், இடது தோளிலிருந்து சிறுவிரல் வரை நீண்ட முந்தானைத் தொங்கலுக்கும் இடையே இரட்டைச் சடை ஆடும் பரப்பிலும்; மேலே சதைபிதுக்கும் சோளியும் கீழே சிறு மணிப்பொறியும் கொண்ட வலக்கையிலும்; அடியில் பரந்து, நுனியில் கூம்பி இருமருங்கும் சடை கரையிட்டு, மெல்லிய பொற்சரம் இழையும் கழுத்திலும் இளங்காவிக் குறுமயிர் படர்ந்திருந்தது. அவளருகில் செல்லச் செல்ல இது தெளிவாயிற்று. இது தெளிவாகத் தெரிய வேண்டும் என்றே வேகமாக அவள் பின்னால் தான் சென்றதாக இப்பொழுது கிரி நினைத்தான். இவ்வாறு மூன்று பரப்பிலும் முளைத்தவற்றை இழையிழையாகத் தனித்தனியே ஓர்ந்து களிக்க வேண்டும் என்று தன்னிச்சையாக ஏற்பட்ட உந்தலின் பிறப்பிடம் எது என்று இப்போது சிந்தித்தான். அது பாலுணர்ச்சி தான் என்பதில் ஐயம் வருவதற்கே இடமில்லை என்று பட்டது.

பாலுணர்ச்சியின் மூலம் புலனல்ல; மூளைதான். என்றாலும் புலனில் தாக்குபவை நரம்பின் வழியே, பிறகு தண்டு வடத்தின் வழியே சென்று மூளையைச் சேர்கின்றன. நல்ல தாக்கல் ஆசையைத் தூண்டி விட, சூழலுக்குத் தக்கவாறு துலங்கல் நிகழ்கின்றது. இது நரம்பியல் உண்மை. இதன்படிதான் அது நிகழ்ந்திருக்க வேண்டும்; ஆனால் அந்த நிகழ்ச்சியில் நேரடியாகத் திளைத்திருந்த நேரத்தில் எவ்வயவு மாயம் !

அந்த மாயச் சூழலில் சிக்கி மயங்கி அவள் பின்னால் செல்வது அவனுக்குத் தெரிந்தது. இன்னும் கூட அவளது மேனி வண்ணம் முத்திரையிட்ட அரக்கென ஒட்டிக் கொண்டுள்ளது. அது தந்தமல்ல, பொன்னல்ல, சந்தனமல்ல; அது செந்தாமரையல்ல, ரோஜாவல்ல, அந்திவானச் செக்கரல்ல; அது மாந்தளிரல்ல, சூல் கொண்ட முகிலல்ல, எண்ணெய் மெருகேறிய சிலைக்கருமையல்ல. உண்ண உருக்கிய ஆநெய்போல் மேனி என்று ஒரு வகையாகக் கூறி திருப்தி அடையலாம். மாலையின் மங்கிய ஒளியில் கடல் நீரைக் காண்கையில் ஒரு கணம் கருநீலமாகவும் மறுகணம் ஆழ்ந்த பச்சையாகவும் தெரியும். இவளது மேனியிலும் இருவகை நிறம் துலங்கிற்று; உருக்கிய நெய்போல ஒன்று; நாள் பட்டு இளங்கருமை கலந்த தேன் போல மற்றொன்று. பார்வையின் கோணத்திற்குத் தக்கவாறு மாறு படும் இரசவாத மேனி அவனைச் சிலிர்க்க வைத்தது.

இடது உள்ளங்கையால் தலையின் பின்புறத்திலிருநது பிடரி வரை இப்போது தடவிக் கொடுத்தான்; தலைமுடி அடங்கவில்லை.

அந்த நிறவலையில் விழுந்த நேரமே தான் மீள முடியாமல் சிக்கிக் கொண்ட நேரம் என்று உணர்ந்தான். அந்த நேரத்தில்தான் இற்றது நெஞ்சம் எழுந்த திருங்காதல் அற்றது மானம் அழிந்த நாண் என்று தோன்றியது. அத்துடன் ஓர் ஐயமும் கிளம்பிற்று: எழுந்த திருங்காதல் என்பது சரிதானு? மற்றதெல்லாம் சரிதான்; இல்லையென்ருல் அவனை அவன், கோவில் மாடுபோல, துரத்திக் கொண்டே சென்றிருக்க மாட்டான்; அப்படித் துரத்துவது அவனுடைய வழக்கமல்ல. ஆனுல் அந்த நேரத்தில் எழுந்தது காதல்தான் என்று மனம் ஒப்புக் கொள்ளவில்லை. ஆணின் காதல், புலன்களில் தொடங்கி மனதில் முடிவதற்குச் செல்கின்றது; ஆனுல் பலவேளைகளில் அது மனத்தை அடைவதில்லையென்று படித்தது நினைவிற்கு வந்தது. இம்மை முழுவதற்கும் அவளுடைய உறவு தேவை என்ற பிரச்னை அப்போது எழவே இல்லை. அது இனக் கவர்ச்சி தூண்டிய பாலுணர்ச்சிதான்; பின்ஞல் ஒருவேளை முளைத்து வளர்ந்து மலரக் கூடிய வித்தாக இருக்கலாம்; ஆனுல் இது நிச்சயமற்றது.

அவளுடன் வந்தவள் அவளுடைய தாயாகத்தான் இருக்க வேண்டும்: ஏனென்ருல், இந்த நிகழ்ச்சியின் முடிவில் அவள் செய்த தை வேறு யாரும் செய்திருக்கமுடியாது. அன்னை காட்டிய சைகைக் கேற்ப, அவள் வாசலுக்குச் சற்று தள்ளிச் சென்று ஒரு மூலையில் தனது செருப்பைக் கழற்றிவிட்டுத் திரும்பினுள். வார்பட்டு வெளுத்த கோலம் பாதத்தில் மிளிர்ந்தது. அப்படித்தான் தனது மனமும் இந்த அனுபவம் பட்டு வெளுத்ததாக நினைத்தான். ஆனுல் இந்த வெளுப்பிலே கோலம் இல்லை; இது மிளிரவும் செய்யவில்லை. காலப் போக்கில் காற்ருேட்டத்தில் மாறக் கூடிய வெளுப்பாக இது படவில்லை; மாருகநரைத்த முடியின் மீட்சியற்ற வெளுப்பாகப்பட்டது.

அவள் உயர்ந்து கிடந்த வாயிற்படியின் மீது வலக்கால் வைத்துக் கடந்தாள். அப்போது திருகிய இடையில் விழுந்தது அவனது நோக்கு. இடையின் நொய்மையைக் காண்பதற்குப் பின்னுேக்கே சிறந்தது என்று விளங்கிற்று. பொய்யோவெனும் இடை என்று அதைச் சொல்லமுடியாது; வேண்டுமானுல் கொம்பவள்ள் கொடி மருங்குல் எனலாம். மெல்லின மற்றும் இடையின அள பெடைகளே அவனை அவ்வுவமைக்குச் சம்மதிக்கவைக்க முயன்றன; ஆனுல் அவனுக்கு முழுச்சமாதானம் இல்லை. இவர்க்கிடையென் மனமே, வளரிள வஞ்சியன்றே என்பதுதான் பொறுத்தமாகத் தோன்றிற்று. ஏனென்ருல் தன் மனம்போலவே அதுவும், பெருகும் வனப்பெனும் கடலுள் ஆழ்வதாகவும், துணையிள வளமுலை சுமந்து வணங்கி நாள்தோறும் தேய்வதாகவும் தெரிந்தது.

இப்போது அவன் சன்னதித் தெருவுக்குள் நுழைந்து விட்டான். யாரோ அவனை அழைத்தது போலிருந்தது. திடுக்கிட்டுப்பார்த்து இருந்த இடத்தை உணர்ந்து, செருப்பை முன்போலவே கடையில் விட்டுவிட்டு நகர்ந்தான். சில விநாடிகள் மனத்தில் வெறும் சூன்யமே நிறைத்தது. பிறகு, எவ்வளவு தெளிவான புலக்காட்சி விளக்கம் என்று வியந்து கொண்டான்.

கோவிலுக்குள் நுழையும் போது, எண்ணெய்ப்பிசுக்கும் கற்பூர மும் கலந்த நெடி இன்று நாசியில் ஏறிற்று; ஆனால் அன்று இது தெரியாதது மட்டுமல்ல, ஓர் இனிய மணமும் சூழ்ந்தபடி இருந்தது.

வாயிலுக்கு நேரே நன்றாக உள்ளே தள்ளி கிழக்கே நோக்கும் சுகவனேசுவரருக்கும், கோவிலுக்குள் நுழைகையில் வலப்புறத்தில் தெற்கே நோக்கும் ஸ்வர்ணாம்பிகைக்கும் தெரிவது போல அவள் சற்றே தயங்கி நின்றது அவனுக்கு இப்போதும் தெரிந்தது. அவன் கொஞ்ச தூரம் பின்தொடர்ந்ததை உணர்ந்து யாரென்று அறிவதற் காகத் திரும்பிப் பார்க்கத்தான் தயங்கினாளா என்பது புரியவில்லை. ஏனென்றால் அவனது பின்தொடரலை அவள் அறிந்துகொண்ட தாகவே காட்டிக் கொள்ளவில்லை. அவள் அதை அறியாமலே இருந்திருக்கலாம்; ஆனால் அவளால் ஒரு காந்தப்படலம் அவனைச் சூழ்ந்ததுபோல அவனால் ஒன்றும் ஏற்பட்டிருக்காதா என்ற கேள்வி அதை மறுத்தது. அன்று நடந்த நிகழ்ச்சித் தொடரைப் போலவே அதுவும் புதிராகத்தான் பட்டது.

அன்று அவளைப் பார்த்ததுதான்; அதற்குப் பிறகு அவளைப் பார்க்கவே இல்லை. அதற்குப்பிறகு கோவில் பக்கமே அவன் போக வில்லை என்றாலும் கூட, சேலத்திலிருந்த வரை, இங்குமங்குமாக நகரத்தெருக்களில் வலம் வந்த போது எங்குமே அவள் கண்ணில் படவில்லை. இது அவனுக்குக் கொடுத்தது ஏக்கமா ஆறுதலா என்பதும் ஐயமாகவே இருந்தது. அந்த நிகழ்ச்சிக்குப்பின் அவளை அவன் காண விருப்பம் கொண்டானா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்; அதுமட்டுமல்ல வேறு எந்தப் பெண்ணைக் காணவும் விருப்பம் இல்லாமல் இருந்தது. என்றாலும் சில சமயங் களில் அவள் என்ன ஆனாள் என்ற கேள்வி கிளம்பும். அப்போ தெல்லாம் மனம் வெடவெட வென்று நடுங்குவது போல் உணர்வான். இன்று கூட அவளை எதிர்பார்த்து வரவில்லை. ஒருக்கால் அவளும் இதே சமயத்தில் வந்து அவன் கண்ணில் பட்டால் என்ன நடக்கும் என்றும் அவனால் சொல்லமுடியாது. அவனாகத் பின்தொடர மாட்டான் என்பது மட்டும் உறுதி—அவள் தனது விழியால் அல்லது குறிப்பால் தன்து ஆசையை வெளியிட்டு அழைத் தால் ஒருவேளை அவன் அவளை மணந்துகொள்ள முயலலாம்.

ஆனல், உண்மை என்னவென்ருல், அவன் அவளை எதிர்பார்க்காதது மட்டுமல்ல, அவளை இங்கே திரும்பவும் சந்திக்கவே விரும்பவில்லை. அன்றைய நிகழ்ச்சித் தொடரை புரிந்து கொள்ள வந்த இடத்தில் வேறு பல புரியாத புதிர்களை அவன் மனம் விடுவிக்க மறுத்தது. தலையைச் சற்றே இடவலமாய் இருக்கும் கயிற்றைத் தளர்த்துபவன் போல அசைத்துக் கொண்டான்.

அவள் பிரகாரம் சுற்றிவர முன்னே சென்ருள், திரும்பிப் பார்க்காமலே. பூங்காற்றிலே தளும்பும் குளத்து நீர்போல அவளது சேலை விட்டு விட்டு பளபளத்தது.

பெண்ணின் நடைக்கு அன்னம், மயில், பிடி என்று கவிஞர்கள் சொல்வது பொதுவாகப் பார்க்கும்போது சரியாக இருப்பதில்லை என்ருலும், இங்கொரு பெண்ணும் அங்கொரு பெண்ணும் அவர்கள் கூற்றை மெய்யாக்கி விடுகின்றனர் என்று நினைத்தான் கிரி. அவளது இயக்கத்தை நடை என்று சொல்வது சரியாகாது; அதைப் படர்தல் என்று குறிப்பது பொருந்தும்; வீணை மீட்டலல்ல அது; வயலின் இழைப்பு. அதைச் சுவைத்தபடியே பின்னல் சென்ருன்.

அவள் அறுபத்து மூவரைப் பார்த்தபடி சென்ருள். அவனுக்கு நேரமாக ஆக அவளது முன்புறத்தைக் காணவேண்டும் என்ற ஆசை. பல முறை பின்புற அழகைக் கண்டு ஏமாறியது போல இம்முறை நடக்காது என்ற நம்பிக்கை. அந்த நம்பிக்கையை நிச்சயமாக்கிக் கொள்ளும் வேட்கை உந்தித்தள்ள வேகமாக நடந்து தென்மேற்கு மூலையிலுள்ள விநாயகர் கோவிலை அடைந்து மெதுவாக கும்பிட்டு விட்டு, அதை வளைய வந்தான். அதைச் சுற்றி வருவதற்கு முதலில் மேற்கே நடந்து, பிறகு வடக்கே சென்று, அதன் பின் கிழக்கே வர வேண்டும். அப்படி அவன் கிழக்கே வரும்போது அவள் மேற்கே வந்து கொண்டிருந்தாள், விநாயகரை நோக்கி.

அவளுடைய விழியைச் சந்திக்க தான் அஞ்சியது அவனுக்கு நினைவு வந்தது. வழக்கமாகவே இது அவனுக்குப் பிடிக்காது; அவன் எந்தப் பெண்ணுடைய கண்ணையும் நேருக்கு நேராகப் பார்த்ததில்லை. நீர்ச்சுழல் தருகின்ற மயக்கத்தையும் சாவு வேட்கையினையும் விழிச்சுழல் தருவதாக அவனுக்கு ஒரு கருத்து. அதனல், முன்னல் பார்த்த உடனே, அவனது நம்பிக்கை நனவாயிற்று. அவனுக்கு மூச்சு தட்டியது,

கஜுராஹோ சிலை என்ருே தென்னுட்டுக் கோவிற்சிலை என்ருே சொல்ல இயலாது; காரணம், இவைகளுக்குக் கொழுமை அதிகம். மலை, கலசம், தாமரையெல்லாம் அவனுக்குச் சரியாகப் படவில்லை.

உருவ அமைப்பைப் பார்க்கையில் இளநீரைவிடப் பனேயே சிறப்பு. கோங்கின் அரும்ம் பவள்ள் முலே யொக்கும் என்பது வடிவுக்குப் பொருந்தினுல் அமைப்புக்குப் பொருந்தவில்லே. அவனுக்கு இப்போது சிரிப்பு வந்தது. ஏன் அவ்வளவு மயக்கம்? காம்புதான் மலரைக் கொடியுடன் இணைப்பது வழக்கம். ஆனுல் இங்கு காம்புதான் மலரால் கொடியுடன் இணேக்கப் பெறுகின்றது. இந்தப் புதுமைதான் மயக்கத்திற்குக் காரணமோ என்று ஐயுற்ருன். காரணம் உண்மையோ பொய்யோ, ஆனுல் அவ்வுறுப்புக்களின் கவர்ச்சி உண்மைதான் என்று முடிவு கட்டினுன்.

அவளுடைய அவ்வுறுப்புக்களேச் சரியாக உணர்ந்து கொள்ள முடியாதது அவனுக்கு அதிருப்தியாகவே இருந்தது. இறுகிய வனப்பின் எழுச்சி எனலாம். எழுச்சி என்பது சரிதான்; மெதுவாய் நிமிர்ந்து பிறகு மெதுவாய்ச் சரியாமல், சட்டென்றெழுந்து சடக்கென விழுபவை அவை. ஒன்றென மயங்கும்படி எழில்கனிய வீங்கி ஈர்க்கிடை போகலாகாது எதிரெதிர் பனேத்து வீங்கி ஆகம் முழுவதும் கவராமல் இரண்டென விளங்கும்படி நிற்கும் தனிப் பெருமை பெற்றவை அவை; அசாதாரணமாக என்று சொல்லும் படியான ஆனுல் குற்றமென்று சொல்ல முடியாத அளவு நீண்டு திரண்ட காம்பு கொண்டவை.

பத்தி யிற்படு சாந்தணி வெம்முலே
சித்தி யிற்படு சிந்தையி ஞரையும்
இத்தி சைப்படர் வித்திடு நீரவே

என்றுதான் அவற்றின் இயல்பைக்கூறி வர்ணிக்க வேண்டும் என்று திருப்தியடைந்தான்.

அன்று போலவே இன்றும் வடக்கே திரும்பி சுப்பிரமணியர் கோவில் பக்கம் நடந்தான். இவ்வளவும் பார்த்த பிறகு, இத்தனேயும் நினேத்த பிறகு, அவள் தன்னே தவருக எடுத்துக் கொள்வாளோ என்ற நினேப்பில் நடந்தான். அவள் தவருக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது தான் இவ்வளவு நேரப் பிரச்னே என்பது அவனுக்கு நினேவு வந்தபோது சிரிப்பாக இருந்தது.

சில விநாடிகளே தடவிக் கொடுத்த பார்வை என்ருலும் அது அவனுக்கு எவ்வளவோ காட்டிக் கொடுத்தது. ஆனுல் பார்வை ஊடுருவாத அவளது சேலே தடங்கலாக இருந்தது. கழுத்தை ஆர்வத்தோடு அணேத்துத் தொங்கிய சங்கிலி பாதி தெரிந்து, பாதி சேலேக்குள் மறைந்தது. மஞ்சள் கயிற்றுக்குப் பதிலாக மெல்லிய பொன்னிழையைப் பயன்படுத்துவதும், தாலிச் சரத்தைச்சோளிக்குள்

பத்திரப்படுத்துவதும் மெட்டி அணியாத இன்றைய மகளிரின் வழக்கம்; அதனால் அவள் மணமானவளா இல்லையா என்று அவன் அறிய முடியவில்லை. மணமான ஒருத்தியின் செம்மையான செழிப்போ அல்லது வேறு சமயங்களில் தோன்றுவது போல ஏமாற்றம் கலந்த ஏக்கமோ அவளிடம் தென்படவில்லை. மாறாக, கூடாத கனவொன்று காணும் விழிப்பே அங்கமெல்லாம் மிளிர்ந்தது. எனவே அவள் மணமாகாதவளாகத்தான் இருக்க வேண்டும்; கருவுறுதல் என்னும் பயனுக்காக மாதமொரு முறை தயாரித்து, பயனின்றிக் கழித்ததன் விளைவாக ஒரு குறிப்பிட்ட சந்தத்தில் கருப்பையைத் தூய்மைப் படுத்தும் மணமாகாதவளாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தான். இந்த ஊகம் அவனுக்கு திருப்தியைத் தந்ததுபோல் இருந்தது; இந்தத் திருப்தி ஏனென்று கேட்டு அதை அலசி ஆராய விரும்பவில்லை அவன்.

முருகன் சன்னதியைச் சுற்றிக் கொண்டு உள்ளே நுழையும் போது, அவள் அவனிருந்த திசை நோக்கி வருவதைக் கண்டான். சற்றே அகன்று விரிந்த வாய்; சிறிதே புடைத்த இதழ்கள்; அவற்றில் ஈரங்கலந்த செவ்வொளி. அவன் பார்ப்பதை அவள் கண்டு கொண்டாளா? பற்கள் தெரியா சிறு விரிப்பு முறுவல்; அப்போது பிளந்த நெஞ்சாகத் தென்படும் வாய். அந்த முறுவலின் பொருளென்ன? இயல்பா அல்லது ஏளனமா அல்லது திருப்தியா என்று தெரிந்து கொள்ள ஆர்வம் ஊறியது. அதனால்தான், துணிவை இரு கண்களிலும் வாரி எடுத்துக்கொண்டு அவளுடைய விழிகளைச் சில கணம் சந்தித்தான். அவள் தனது நெடுங்கண் என்னும் குடங்கையால் நொண்டு கொண்டு அவனது வனப்பினைப் பருகுவதுபோல் உணர்ந்தான். இனம்புரியாத நிம்மதி ஒரே ஒரு கணந்தான்; பிறகு அதிக சலனம்—செவ்வரி பரவும் வெள்ளையில் பாவை பிறழப் பிறழ மின்னியது பொறுக்காமல், மருண்டு, தனது பார்வையைச் சரித்தான்.

அவனது மருட்சியை அவள் உடனே உணர்ந்திருக்க வேண்டும். இல்லையென்றால் அவளது இதழ்கள் ஏன் சட்டென்று கனிந்த மாதுளையைக் கீறி விரித்தது போல சிரிப்பில் பிரிய வேண்டும்? குறுவெளி இடையிடையே கொண்ட நிரல் பிறழ்ந்த பற்களின் காந்தி ஏக்கத்தை ஊட்டியது. சீர்குலையாமல் தொடுக்கப் பெற்ற முத்துப்பற்களைவிட இவை அதிகமாய்க் கவர்ந்தன.

இப்போது முருகன் கோவிலுக்கு வெளியே நின்றிருந்த கிரி தனது பார்வையை வானில் நிறுத்தினான். அங்கே ஒளிக்கற்றைகளை வீசும் கெண்டை வடிவக் கண்கள் இரண்டு சுழன்று சுழன்று எரிந்தன.

அவள் பச்சைக்கொடி காட்டியது இருதலைக் காமமாக்கிற்று; என்றாலும் தான் அங்கே நிற்காமல் முருகன் சன்னதியை விட்டு

வெளியே வந்தது காதல் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் செய்து விட்டதாக அவன் நினைத்தான். அங்கேயே நின்று, அடிக்கடி அவளைப்பார்த்து விழிகளால் பேசிப் பழகுவதை விட்டு ஓடிப் போனதைக் காரணமாகக் காட்டிக்கொண்டான். அவளை விரும்ப வில்லையா, முடிந்தால் மணந்து கொள்ள விருப்பம் இல்லையா என்ற இரண்டு கேள்விகளுக்கும் இல்லை என்ற பதில்தான் சற்று தாமத மாகக் கிடைத்தது. என்றாலும் அவளது நினைவாகவே அங்கிருந்து மூலஸ்தானத்திற்குச் சோர்வு நடையில் சென்றான்.

அன்று அங்கே அதிகக் கும்பல் இல்லை. ஏதோ ஒரு முக்கிய மான அபிஷேகத்திற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. சற்றைக்கெல்லாம் அவளும் வந்து எதிர்ப்புறம் நின்றாள். பின்னால் வந்த அவளுடைய அன்னை இமைக்காமல் தன்னைத் துளைத்ததை உணர்ந்தான். ஒரு கணம் தயக்கம்; அங்கிருந்து உடனே சென்று விடலாமா என்ற எண்ணம். ஆனால் அந்த நேரத்தில் அவள் அவனைப் பார்த்தது போல் இருந்தது. ஏதோ ஒரு வேகத்தில் அவளது கால் முதல் முடிவரை நோட்டம் விட்டான்; இரண்டு முறை மனதிற் குள்ளாகவே அவளது ஆடையைக் களைந்ததாக இப்போது நினைத் தான். அந்தச்செயல் அவனுடைய கண்ணில் விழுந்திருக்கவேண்டும்: ஏனென்றால், இரண்டாவது நோட்டத்தில் அவளுடைய கண்கள் சந்தித்து மறைந்தபோது, அவை அவனை அதட்டுவது போல் தோன்றின; அவளுடைய முகமும் சற்று சிவந்தது போல் தெரிந்தது.

அதற்குப்பிறகு நடந்தவை அவனுக்குச் சரியாக நினைவுக்கு வருவதில்லை. குறுகிய இருண்ட காலம் இடைப்படுகின்றது. கடைசி யில் பட்டது மட்டும் மிக நன்றாக நினைவுத்திரையில் விழுகிறது. அந்தக்கடைசி பட்டறிவு மட்டும் முழுமையாக விளங்குகின்றதா என்றால், அதுவும் இல்லை. அது மட்டும் விளங்கி விட்டால் மற்ற நிகழ்ச்சிகளின் சிக்கலும் விடுபட்டு விடும் — அவைகளுக்குச் சிக்கலே இராது.

ஒரே வகை எண்ணச் சுழலில் சிக்கி, ஸ்வர்ணாம்பிகை சன்னதிக்கு நடந்தான். எல்லோரும் நடந்து வந்ததாகவே அவனுக்குத் தெரிந்தது. வழியில் மூச்சு ஆழ்ந்து விரைந்தது; இதயம் விரைந்து கனத்தது; முகம் திருகியது; விழி குறுகியது; நாசி விரிந்தது; மேனி தகித்தது; வேர்வை பனித்தது; எச்சில் சுரந்தது; தொண்டை அடைத்தது. அம்மனுக்கு முன்னால் நினைவின்றி நின்றது இப்போது தெரிந்தது. உடலில், அன்று போலவே இன்றும், சிறுநடுக்கம் தோன்றி முடிந்தது. அதற்குப்பிறகு நடந்ததுதான் முக்கியமானது; அதுதான் அன்றைய நிகழ்ச்சி இழைகளைச் சுருட்டிச் சிக்கலாக்குவது; இன்றைக்கும் தெரிவது; செவியில் படுவது,

அப்போது அவனுக்கு வாந்தி எடுக்கவேண்டும்போல் தோன்றிற்று. என்ன செய்யலாம் என்ற நினைப்பில் சுற்றும் முற்றும் பார்த்தது புலப்பட்டது. அப்படிப் பார்க்கையில், சற்றே பின்னால் சாய்ந்த அவளது தலையும், வெளுத்த முகமும், ஆழ்ந்த நீண்ட ஓசையற்ற பெருமூச்சும் தெரிந்தன.

அடுத்தது அருகில் வந்த பிறகு, அதை நினைத்துப் பார்க்கத் தயங்கினான் கிரி. இது வரையிலும் அவனுக்கு எந்தப்பலனும் கிடைக்கவில்லை. இத்தனை நாள் வரை இருந்த உறுத்தல் கொஞ்சங் கூட குறையவே இல்லை. கடைசியில் தைத்த முள்ளை எடுக்கமுடியும் என்பது வெறும் நப்பாசையாகத்தான் நின்றுவிடுமோ என்று அஞ்சினான் அவன். அது அவனுக்கு வரவேண்டிய ஒன்று; ஆனால் அது அவளுக்கு வந்தது. அவனுக்கு வரவேண்டியதை அவள் ஏற்றுக் கொண்டதுதான் உறுத்திக்கொண்டே இருந்தது. அது அவளை அடையாமல் தன்னை அடைந்திருந்தால் இந்த நிகழ்ச்சித் தொடர் சிக்கல் நீங்கி எளிமையாக, சாதாரணமாக, முனையற்ற முள்ளாக ஆகியிருக்கும். ஆனால் அது அவளைச்சார்ந்ததால் மிகக் கூரிய முனைபெற்று ஆழமாகத் தைத்துவிட்டது.

அவள் பட்டது, தான் மட்டும் பட்டிருந்தால் தன்னோடு போயிருக்கும்; ஆனால் இப்போது, தான் படாமல் அவள் பட்டதால், அது அவளோடு நிற்கவில்லை; பரிதியும் மதியும் பாம்பும் ஐங்கோளும் இரு நிலமும் சுருதியும் மருவிய முனிவர்கணங்களும் பட்டிருக்க வேண்டும் என்று மிகைப் பட நினைக்கத் தோன்றியது. தயக்கத்தை மிகுந்த பிரயாசையோடு நீக்கிவிட்டு, அவன் அவள் நின்ற இடத்தை நோக்கினான். அவள் தனது இடக்கையின் வெளிப்புறத்தால் நெற்றியைத் துடைத்தாள். இறுதி நிகழ்ச்சி அவன் கண்ணில் விழுவதற்கு முன்னால், வெட்கச் சிவப்பு வர்ணத்தில் உதயமான பெருவட்ட நிலா வெடித்துச் சிதறியது.

சிதறியதைப் பார்த்ததும் தான் திடுக்கிட்டதன் முழுப் பொருளும் அப்போது புரியவில்லையென்றாலும் இப்போது தெளிவாதப் புரிந்தது. ஆனால் அடுத்த விநாடி அவளுடைய அன்னையைப் பார்க்கத் தூண்டியது எது என்று இன்னமும் புரியவில்லை. அந்த அன்னையோ ஒன்றுக்கு மாறாக, புருவத்துக்கடியில் இரண்டு நெற்றிக் கண்கள் கொண்டு இமைக்காமல் அவனைச் சுட்டுக் கொண்டிருந்தாள். அந்த சூட்டைப் பொறுக்க மாட்டாமல் தனது பார்வையைத் திருப்ப விரும்பியும் முடியாமல் தவித்தபோது அவளே அவனை விடுவித்து தனது மகளைப் பார்த்தாள். பார்த்தவள் முகம் எரிந்தது. அன்னையின் முகத்தை விட்டுப் பார்வையை நீக்கி மகளின் முகத்தில் பதித்தான். திருப்தி பூத்த அவள் முகத்தை, அன்னையின் தீக்கொழுந்து ஒன்று விரைந்து நீண்டு தீண்டித் தணிந்தது.

இப்போதும் கேட்டது சப்தம்.

கிழவியும் குமரியும்

நீச்சே | வி. து. சீனிவாசன்

[மாபெரும் தத்துவ ஞானிகளில் ஒருவன் ஜெர்மன் நாட்டைச்சேர்ந்த நீச்சே (1844-1900); அவனுடைய முக்கியமான படைப்பு 'ஜாரதுஷ்டிரன் இவ்வாறு சொன்னான்' என்பது. படிப்பதற்குக் காவியம் போலவும், சிந்திப்பதற்குத் தத்துவம் போலவும் தோன்று கிற இதை ஒரு சொல்லால் விளக்க முடியாது. இந்தப் படைப்பின் ஒரு சுவையான பகுதியே 'கிழவியும் குமரியும்'. மறத்தின் புகழ்பாடும் நீச்சேவுக்குப் பெண் என்றால் பிடிக்காது. இந்த உணர்ச்சிக் கீற்று பின்வருவதில் இழையோடுவதைக் காணலாம்.]

— மங்கிய மாலை ஒளியில், நீ ஏன் ஒளிந்து செல்கிறாய் ஜாரதுஷ்டிரா? உன் போர்வையில் எதை மிக எச்சரிக்கையுடன் ஒளித்துச்செல்கிறாய்? பிறர் கொடுத்த செல்வமோ? உனக்குப்பிறந்த குழவியோ? நீயும் தீயவர் துணையாய் கள்ளர் வழியைக் கைப் பிடித்தனையோ?

— உண்மை, என் சகோதரனே [ஜாரதுஷ்டிரன் விடையிறுத் தான்]. ஓர் ஒப்பற்ற செல்வம் எனக்குக் கிடைத்தது; ஓர் உண்மையைக் கொண்டு செல்கிறேன். ஆனால் அது குழந்தையைப் போல் ஆளுதற்கரியது; அதன் வாயை நான் மூடா விட்டால் அது உரக்கக் குரலெழுப்பிவிடும்.

இன்று, ஞாயிறு மறையும் தருணம், நான் தனிவழியே செல்லும் பொழுது பழுத்த சிறு கிழவி ஒருத்தி என் எதிர்ப்பட்டு என் நெஞ்சிற்கு இப்படிச் சொன்னாள்.

'ஜாரதுஷ்டிரன் பெண்களிடம் நிறைய பேசியுள்ளான்; ஆனால் அவன் பெண்களைப்பற்றி எங்களிடம் ஏன் பேசவில்லை?'

நான் அவள் கேள்விக்கு விடையளித்தேன்: 'பெண்களைப் பற்றி ஆண்களிடம் மட்டுமே பேசவேண்டும், தாயே.'

'என்னிடமும் பெண்களைப்பற்றிப் பேசு, ஜாரதுஷ்டிரா' என்றாள் அவள். 'வயது ஆகி விட்டதல்லவா, இந்தக் கிழவி விரைவில் மறைந்து விடுவாள்!'

கிழவியின் வேண்டுகோளுக்கிணங்க அவளிடம் இவ்வாறு கூறலானேன்:—

பெண்ணைப்பற்றிய எல்லாமே ஒரு புதிர்; அவளைப்பற்றிய அனைத்திற்கும் ஒரே ஒரு விடைதான் உண்டு: அது தான் கருவுறுதல்.

பெண்ணுக்கோ ஆண் ஒரு துணைக்கருவி; முடிவோ எப்பொழுதும் குழந்தை. ஆனால் ஆணுக்குப் பெண் என்ன?

உண்மை மனிதன் இரண்டை விழைகிறான்: ஆபத்தும் விளையாட்டும். இந்தக்காரணத்தாலேயே ஆபத்தான விளையாட்டுப் பொருளான பெண்ணை நாடுகிறான்.

மனிதனைப் போருக்குத் தயார் செய்தலும், அந்தப் போர் வீரனின் பொழுதுபோக்காகப் பெண்ணை வளர்த்தலும் தவிர மற்றைய அனைத்தும் அர்த்தமற்ற முட்டாள்தனம்.

எந்தப் போர்வீரனும் மிகவும் இனிய கனியை நாடுவதில்லை. ஆகவே அவன் பெண்ணை விழைகிறான். ஏனெனில் மிகவும் இனிமையானவளும் சிறிது கசப்புடையவளே.

பெண் ஆணைவிட குழந்தையைப் புரிந்து கொள்கிறாள். ஆனால் மனிதனே பெண்ணைவிட குழந்தைமை வாய்ந்தவன்.

ஒரு குழந்தை உண்மை மனிதனிடத்தில் மறைக்கப் பட்டுள்ளது; அது விளையாடத் துடிக்கிறது. வா, பெண்ணே; ஆணில் குழந்தையைக் கண்டுபிடி.

வாரா உலகத்தின் நற்பண்புகளான ஒளியால் தூயதும் விலை மதிப்பதற்கு அரியதுமான உயர்ந்த மணியான பெண், விளையாட்டுப் பொருளாய் ஒளிரட்டும்.

விண்மீனின் மின்னல் உன் காதலில் மிளிரட்டும். உன் நம்பிக்கை இவ்வாறாகட்டும்: 'நான் மீமனிதனைக் (Superman) கருத்தரிப்பேனாக.'

உன் காதலில் வீரம் மிளிரட்டும். உன் காதலால், உன் உள்ளத்தே அச்சத்தையூட்டும் அவனைத் தாக்கு.

உன் காதலில் உன் நாணயம் நிற்கட்டும். பெண் நாணயத்தைப் பற்றி அறிந்தது கொஞ்சமே. ஆனால் இது உன் நாணயமாக இருக்கட்டும்.

'அவன் உன்னை நேசிப்பதைவிட அவனை நீ நேசி. அன்பிலே அவனுக்கு அடுத்ததாக இருக்காதே.

காதலிக்கும் பெண்ணைக் கண்டு ஆணினம் அஞ்சட்டும். இதனால் அவள் சகலவித தியாகங்களுக்கும் தன்னைத் தயார் செய்து கொள்ளட்டும். அப்பொழுது அவளுக்கு அனைத்துமே காதலின் முன் துச்சமாகப்படும்.

வெறுக்கும் பெண்ணைக் கண்டு ஆண் அஞ்சட்டும். ஏனெனில் ஆணோ அடித்தளத்தில் கயவன்; ஆனால் பெண்ணோ மிகவும் கீழத்தரமானவள்.

யாரைப் பெண் மிகவும் வெறுப்பாள்? இரும்பு காந்தத்தை நோக்கி இப்படிப் பேசிற்றும்: நான் உன்னை மிகவும் வெறுக்கிறேன். ஏனெனில் நீ என்னைக் கவர்கிறாய்; என்றாலும் என்னை உன்பால் ஈர்த்துக்கொள்ளும் வலிமையற்று இருக்கிறாய்,

ஆணின் இன்பம் 'நான் செய்வேன்.' பெண்ணின் இன்பமோ 'அவன் செய்வான்.'

பார், இந்த உலகம் எவ்வளவு முழுமை பெற்றது என்று காதல் மயக்கத்தில் தன்னை அர்ப்பணித்த ஒவ்வொரு பெண்ணும் நினைக்கிறாள்.

தன் மேல்தளத்திற்கு அடிமட்டம் கண்டு, அதன் ஆணைக்கும் கீழ்ப்படிய ஒவ்வொரு பெண்ணும் விழைகிறாள். பெண்ணின் இயற்கை மேம்போக்கானது; மாறுவது; நுரைத்த வெண்படலம் ஆழமற்ற நீர்த்தளத்தின்மேல் படிவதை ஒத்தது.

ஆனால் ஆணின் இயற்கையோ ஆழமானது; அதள பாதளத்தில் ஓடும் நீரோட்டத்தின் வன்மை படைத்தது. பெண் இதன் தரத்தை உணர்கிறாள்; ஆனால் அறிவதில்லை.

இதை யெல்லாம் கேட்டபின் முதியவள் கூறலானாள்: 'ஜாரதுஷ்ரன் இளையவருக் கேற்ப பல சுவையான கருத்துக்களைக் கூறினான்.

'இது எவ்வளவு வியக்கத் தக்கது! பெண்களைப்பற்றி சிறிதே அறிந்த ஜாரதுஷ்டிரன் இவ்வளவு அரிய உண்மைகளை எவ்வாறு கூறினான்! ஒரு வேளை பெண்களைப் பொருத்மட்டில் எதுவும் உண்மையோ!

'இவ்வளவு நேரம் என்னிடம் பேசியதற்கு நன்றியாக இந்தச் சிறிய உண்மையைப் பரிசாகத் தருகிறேன். நான் மிகவும் வயதானவள்; எனவே உனக்கு இதைத் தரத் தகுதி பெற்றவளே.

'கட்டிப்போடு; வாயை இறுக்க மூடு; இல்லாவிடில் இந்த உண்மை உரக்கக் குரலெழுப்பும்.'

'உண்மையைத் தந்துவிடு, தாயே' என்று நான் கேட்டேன். அவள் சொன்னாள்:

'பெண்ணை நாடிச் செல்கிறாயா? அப்படியானால் உன் சவுக்கை மறக்காதே.'

இப்படிச் சொன்னான் ஜாரதுஷ்டிரன்.

காதல்

சி. மணி

காதல் காதல் என்ப; காதல்
வெறியும் நோயும் அன்றே; நினைப்பின்,
இறக்கம் நோக்கிப் பாயும் நீராம்;
சாதல் கவிந்த வாழ்வில்
வானம் தந்த வாம நிலவாம்.

பிரச்னை

ஞானக்கூத்தன்

திண்ணை இருட்டில் எவனோ கேட்டான்
'தலையை எங்கே வைப்பதாம்?' என்று;
எவனோ ஒருவன் சொன்னான்:
'களவு போகாது கையருகே வை.'

கூடல்

எஸ். வைத்தீஸ்வரன்

1. உலகக்கண் கூசப் பொருளை
விகாரத் தெளிவாக்கும்
பகல் மறைத்த முழு இரவில்
மனந்திறந்து,
விரல் வழியாய் அழகளந்து,
குரல் வழியாய் அன்பறிந்து,
'பச்சை' மெய்யில் இருள்தடவி
இச்சைப் பொய்யாக்கி
ஆடிக் களிக்கும்
அந்தரங்க விளையாட்டு.

2. வியர்வை, ஒழுக்கம்,
வறுமை, வெட்கம்
தேவையற்ற துகிலை
வேண்டித் துறந்து
ஒருகணம்
பிறப்பின்
சோகச் சுகமறியும் வெறியில்
உடல்கள் படுமோர்
இன்ப முயற்சி.

3. சுயநலங்கள் இரண்டு
கைகோர்த்துக் கலந்து
பொதுநல மென்று
புரண்டு சொல்லும் பொய்.

4. மயக்கிருட்டில்
உணர்வால் தடமறிந்து
கன்னம் வைக்கும்
உள்ளத் திருடனின்
கள்ளக் கலை.

இறைவி

சிவா

மடியில்நீ எனைக்கிடத்தி மகிழும் போது
    மழலைமொழி யுதிர்க்குமுன்றன் குழந்தை யாவேன்.
கொடியெனநீ என்மீதில் படரும் போது
    கொழிகாதற் கடல்நீந்தும் குமர னாவேன்.

வடிவேற்கண் கதையென்பால் வழங்கும் போது
    வண்ணத்தமிழ் இசைக்கின்ற கவிஞ னாவேன்.
படித்தறியாக் காதற்கலை பயிலும் போது
    பணிவார்ந்த மாணவனாய் நினக்கே ஆவேன்.

இடையெனது கையிரண்டில் ஆடும் போது
    இதயத்தை நினக்காக்கும் அன்றி லாவேன்.
நடைகற்கும் குழவியாய்நீ ஆகும் போது
    நானுன்னை அணைத்துமகிழ் அன்னை ஆவேன்.

கொடையாக நின்னலத்தைக் கொள்ளும் போது
    குறைமனமில் இரவலனாய் நானே ஆவேன்.
படையாக நின்னிளமை பாயும் போது
    பகையடக்கி வெற்றிகொளும் வீர னாவேன்.

வேண்டுவார்க்கு வேண்டுமாறு வுருவெ டுத்து
    வேண்டுவன ஓர்இறையே அருளு மென்றால்
வேண்டுமனக் காதல்தரு வடிவ மாகி
    விரைந்தருள்செய் பெருங்கருணை இறைவி நீயே!

உவமையாக்கல் : 1

இரா. அருள்

பாரதியின் கவிதைகளில் சில மிகப் புகழ் பெற்றவை. அவற்றில் ஒன்று "செந்தமிழ் நாடென்னும் போதினிலே" என்று தொடங்குவதாகும். இக்கவிதை புகழ்பெற்ற கவிதை மட்டுமல்ல; பிரச்னைக் கவிதையும் ஆகும். இதில் காணும் பிரச்னையே இதைப் பலர் உயர்த்திப் பேசுவதற்கும் தாழ்த்துவதற்கும் காரணமாகிறது.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்று கவிதையில் வரும் முதலிரு வரிகளே இப்பிரச்னையைத் தோற்றுவிக்கின்றன. இதிலுள்ள பிரச்னை ஒரு புலனுறுப்புக்குரிய புலனை (Sense) இன்னொரு புலனுறுப்பு நுகர்வதாகக் காட்டப் பட்டிருப்பதாகும். இது புலக்காட்சி அறிவு (Perception) சம்பந்தப் பட்ட பிரச்னை.

செந்தமிழ் நாடென்று கூறும்பொழுது காது தேனைச்சுவைக் கிறது என பாரதி கூறுகிறார்.

புலனுறுப்புக்களின் தொழில் விதிக்குட்பட்டவை: காது ஒலியைக் கேட்கும்; கண் காட்சிப்பொருளைப் பார்க்கும்; நாக்கு சுவையைச் சுவைக்கும். இங்குள்ள கேள்வி செந்தமிழ் நாடென்று கூறும்பொழுது காதில் கேட்டல் உணர்வு ஏற்படுவதற்குப் பதிலாக எப்படிச் சுவை உணர்வு ஏற்படுகிறது என்பதாகும்.

காதில் தேன்பாய்கிறது என்பது காது தேனின் சுவையை சுவைப்பதாகப் பொருள்படும். நாக்குதான் தேனின் சுவையை சுவைக்குமே ஒழிய காது அல்ல. ஒரு புலனுறுப்பு ஒரு குறிப்பிட்ட வேலையையே செய்யும்.

செந்தமிழ் நாடென்பது ஒரு புறத்தூண்டல். இது நம் காதைத் தாக்கும்பொழுது கேட்டல் என்ற புலக்காட்சிஅனுபவம் (Perceptual experience) ஏற்படுகிறது. இது இயற்கையானது. இதற்கு மாறாக ஒரு புறத்தூண்டல் காதைத்தாக்க அழகிய காட்சிப்புலன் சம்பந்தப்பட்ட புலக்காட்சி அனுபவம் ஏற்படுவதும், காது சுவைப் புலன் அனுபவத்தைப் புலக்காட்சி அனுபவமாகப் பெறுவதும் இயற்கைக்குப் புறம்பானவையாகும். நாக்கு தேனைச்சுவைப்பதற்குப் பதில் காது தேனைச் சுவைப்பதாக உள்ள பாரதியின் கற்பனையே கவிதையில் இருக்கும் பிரச்னை. இது இலக்கியத்திற்குப் புதிதல்ல; வாழ்க்கை அனுபவத்திற்கும் புதிதல்ல; இது போன்ற நிகழ்ச்சிகள் உடலியலைப் பொருத்தவரையில் முடியக்கூடிய ஒன்றேயாகும். இது

போன்ற மாறுபட்ட அனுபவங்கள் எப்படி ஏற்படுகின்றன என்பதை நரம்பு உடலியல் (Nerve physiology) அறிவின் மூலமாக கிரே வால்டர் (Grey Walter) என்பவர் " லிவ்விங் பிரெயின் " (Living Brain) என்ற புத்தகத்தில் மிகத்தெளிவாக விளக்குகிருர்.

பொதுவாக புலத்தொகுதியை (Sensory system) தொலை பேசித் தொகுதியோடு (Telephone system) ஒப்பிடலாம் எனக் கூறுகிருர். செய்தித் தொடர்பு சம்பந்தப்பட்ட தவறுகள் இரண்டிலும் நிகழலாம். தொலைபேசித்தொகுதியில் செய்தியை அனுப்புபவர் (Sender) தான் முக்கியம். அவராலேயே செய்தியின் பொருள் நிச்சயிக்கப்படுகிறது. தொலைபேசியில் தவருன எண் தொடர்பு (wrong number connection) ஏற்பட்டு செய்தியை நாம் கொடுத்தால் கூட செய்தியின் பொருள் மாருமல் அப்படியேதான் இருக்கும். இதே போன்ற தவருன எண் தொடர்பு மூளையில் ஏற்படும்பொழுது விளைவு வேறு விதமாக இருக்கிறது.

புலக்காட்சி (Perception) அனுபவங்கள் புலனை (Sense) மட்டுமே சார்ந்தில்லை; அவை மூளைப் புறணியையும் (brain cortex) சார்ந்துள்ளன. புறத்தூண்டல் (External stimulus) புலனுறுப்பைத் தாக்குகிறது. புலன் நரம்புத்தொகுதி மூலம் பிரயாணம் செய்து மூளையை அடைகிறது. குறிப்பிட்ட புலத் தூண்டலை அதற்குரிய மூளைப்புறணிப் பகுதியோடு (appropriate reception areas in the cortex) புலத்தொகுதி இணைக்கிறது.

மூளைப்புறணி பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் பிடரிப் பிரிவு (Occipital lobe) காட்சி சம்பந்தப்பட்ட செயல்களைச் செய்கிறது; பக்கப்பிரிவு (Parietal lobe) தொடுபுலன் சம்பந்தப் பட்ட காரியங்களைச் செய்கிறது; பொட்டுப் பிரிவில் (Temporal lobe) மூன்று பகுதிகள் உள்ளன. முதற்பகுதி ஒலிப்புலன் சம்பந்தப்பட்ட செயல்களைச் செய்கிறது. இரண்டாவது பகுதி சுவைப்புலன் சம்பந்தப்பட்ட செயல்களைச் செய்கிறது.

சுவைப்புலத்தூண்டல் மூளையின் சுவையுணர்வுப் பகுதியை அடைகிறது. காட்சிப் புலத்தூண்டல் மூளையின் காட்சிப் பகுதியை அடைகிறது. தொலை பேசியில் தவருன எண் கிடைப்பது போல் இங்கும் சில சமயங்களில் தவருன தொடர்பு ஏற்படுகிறது. காட்சிப்புலச்செய்தி மூளையின் காட்சிப் புலப்பகுதியோடு இணைக்கப் படுவதற்குப் பதிலாக மூளையின் கேள்விப் பகுதியுடன் தவருக இணைக்கப்படுவதும் உண்டு. இது போன்ற நேரங்களில் புலக்காட்சி அனுபவத் தன்மையில் தவறு ஏற்படுகிறது.

உதாரணமாக நாக்கின் நுனி புளிக்காடியைத் (Vinegar) தொடுவதாக வைத்துக் கொள்வோம். புளிக்காடித்தூண்டல் மூளையின் சுவைப் புலப் பகுதியோடு இணைக்கப்பட்டால் நாக்கு புளிக்காடியைச் சுவைக்கும். மாறாக புலத்தொகுதி இச்சுவைப்புலனை மூளையின் கேள்விப் பகுதியில் தவறாக இணைத்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். நாம் எதை சுவைப்போம் என நினைக்கிறீர்கள்? எதையும் சுவைக்க மாட்டோம், மாறாக அதிர்ச்சிமிக்கப் பேரொலியையே கேட்போம். இதேபோல் கேள்விப் புலத்தூண்டல் மூளையின் கேள்விப் பிரிவோடு இணைக்கப்படாமல் மூளையின் காட்சிப் பகுதியோடு இணைக்கப்பட்டுவிட்டால், நம் காதைத் தாக்கிக் கொண்டிருக்கும் இசை ஒலியை கேட்டு அனுபவிப்பதற்குப் பதிலாக பல காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்போம். தொடு புலன் சம்பந்தப்பட்ட புறத்தூண்டல் தொடுபுலன் சம்பந்தப்பட்ட மூளையின் பகுதியான பக்கப் பிரிவோடு இணைக்கப் படாமல் மூளையின் காட்சிப் பகுதியுடன் இணைக்கப் பட்டால் தொடுபுலன் உணர்வு சம்பந்தப் பட்ட அனுபவம் ஏற்படுவதற்குப் பதில் பல காட்சிகளைக் கண்டு கொண்டிருப்போம். இதே போல நாற்றம் சம்பந்தப்பட்ட புறத் தூண்டல் மூளையின் சுவைப் பகுதியுடன் இணைக்கப்படாமல் அப்பிரிவிலேயே உள்ள கேள்விப் பகுதியோடு இணைக்கப் பட்டால் மணத்தை நுகர்வதற்குப் பதிலாக ஒலியைக் கேட்டுக் கொண்டிருப்போம்.

இங்கு எல்லோருக்கும் பொதுவாக ஒரு ஐயம் எழலாம். நாக்கின் நுனி புளிக்காடியைத் தொடுவதற்குப் பதில் தேனைத் தொடுவதாகக் கொள்வோம். பிறகு இது கேள்விப் பகுதியோடு இணைக்கப் பட்டால் எவ்வகைப் பட்ட கேள்விப் புலனுருவம் கிடைக்கும்? நிச்சயமாகஇப்பொழுது அதிர்ச்சிமிக்கப் பேரொலியைக் கேட்க மாட்டோம். அதற்கு மாறாக இனிமை நிறைந்த இசை ஒலியைக் கேட்போம். இதேபோல் அதிர்ச்சி நிறைந்த ஒலி காதைத்தாக்கி அது மூளையின் கேள்விப் பகுதியோடு இணைவதற்குப் பதில் மூளையின் காட்சிப் பகுதியோடு இணைந்து விட்டால் நம் கண்கள் அருவருப்பு மிக்க காட்சிகளையே கண்டு கொண்டிருக்கும். மாறாக இன்னிசை ஒலி காதைத் தாக்கும்போது அது மூளையின் காட்சிப் பகுதியோடு இணைந்து விட்டால் நம் கண்கள் அழகிய காட்சிகளைக் கண்டுகொண்டிருக்கும். எனவே, புலனுறுப்பைத் தாக்கும் ஒருபுலனின் பண்புக்கேற்ப, மூளையில் ஏற்படும் தவறான எண் தொடர்பு காரணமாக விளையக் கூடிய புலக்காட்சி அனுபவத்தின் பண்பும் அமைகிறது.

மேலே பார்த்தவரையில் பாரதியின் கவிதையில் உள்ள பிரச்னை உடலியற்படி தீர்க்கக் கூடிய ஒன்றே என அறியலாம்.

பாரதியினிடம் மட்டுமேயன்றி இவ்வகை புலக்காட்சி அனுபவங்களை அவருக்கு முந்திய காலத்தைச் சார்ந்த தியாகராச சுவாமிகளிடமும் காணலாம். இசை உலகிற்கு பெரும் படைப்பை அளித்துள்ள அவர் தம் கீர்த்தனை ஒன்றை

ஓ ராமா நீ நாம எந்த ருசிரா

என ஆரம்பித்துள்ளார். இராமனின் பெயரைச் சொல்லும் பொழுதே அதைச் சுவைப்பதாகக் கூறுகிறார். சுவை தாக்கைச் சார்ந்தது. ராமா என்ற ஒலி கேள்விப் புலத்தூண்டல் ஆகும். இது மூளையின் கேள்விப் பகுதியோடு இணைக்கப் படாமல் மூளையின் சுவைப் பகுதியோடு இணைக்கப்படும் பொழுதே இப்படிப் பட்ட புலக்காட்சி அனுபவம் அல்லது கற்பனை தோன்றுகிறது.

இதே போன்ற ஒன்றை உடுமலை நாராயண கவியிடம் காணலாம். அவருடைய

காதல் எந்தன் மீதில் என்றால்
காதில் இனிக்கிறது

என்று தொடங்கும் பாடலில் இதே போன்ற கற்பனையைக்காணலாம். காதல் என்று சொல்லும் போது காது இனிமையான ஓசை அல்லது ஒலி இன்பத்தைப் பெறலாமே ஒழிய இனிப்புச் சுவையை சுவைக்க முடியாது. ஆனால் இங்கு இனிப்பைச் சுவைப்பதாக வருகிறது. இதற்கும் மேலே குறிப்பிட்டவைகளே காரணமாக அமைகின்றன.

அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளில் கூட புலக்காட்சி அனுபவம் சம்பந்தப்பட்ட இவ்விதத் தவறுகள் ஏற்படுகின்றன. ஆனால் அவை ஒரு குறிப்பிட்ட நிலையிலேயே நின்று விடுகின்றன. ஒரு இசைக் கருவியை ஒருவன் இசைத்துக் கொண்டிருக்கும்பொழுது ரசிகர்கள் "அந்த ராகத்த பாருங்க" என்று கூறி காட்சிப்படுத்தும் செயல் அவர்களிடம் சாதாரணமாக உள்ள ஓர் இயல்பு ஆகும். இந்த இயல்பு அந்நிகழ்ச்சியோடு முடிந்து விடுகிறது. அது ஒரு பிரச்னைக்குரியதாக ஆவதில்லை. ஆனால் இதுவே இலக்கியத்தில் தென்பட்டால் அது பிரச்னைக்குரிய ஒன்றாக ஆகிவிடுகிறது. மேற்கண்ட கவிதைகளிலுள்ள பிரச்னைகள் இவ்விதமாக ஏற்பட்டவைதான்.

முடிவாக மேலேகண்ட கவிதைகளிலுள்ள பிரச்னைகள் தவறான அனுபவங்கள் காரணமாக விளைந்தவைகள் அல்ல என்பது தெளிவாகிறது. இலக்கியப் படைப்பில் ஏற்படும் புலக்காட்சிஅறிவு சம்பந்தப்பட்ட தவறு நம்மூளையில் ஏற்படும் தவறான எண் தொடர்பு காரணமாக விளைவதாகும். இவ்வனுபவங்கள் இயற்கையானவை தான். ஆகவே நாம் மேலே கண்ட சில கவிதை உதாரணங்கள் மனிதயியல்பின் அடிப்படையில் எழுந்த கற்பனையே யாகும். அவை எவ்வகையிலும் இயற்கைக்கு முறணானவை என்று கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அகவன் மகளும் அகவும் மயிலும்

கண்ணன்

கவிஞர் சுரதாவின் தேன்மழை என்னும் கவிதைத் தொகுப்பில் மயில் என்னும் கவிதையின் முதல் வரியான

அகவும் மயிலே! அகவும் மயிலே!

என்பதை குறுந்தொகையில் வரும் ஔவையாருடைய கவிதையின் முதல் வரியான

அகவன் மகளே அகவன் மகளே

என்பதை நினைவூட்டுகிறது.

ஆட்டுக தோகையை! ஆடுக நீயே!

என்னும் மயில் கவிதையின் கடைசி வரி

……………… பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே

என்பதையும் நினைவுபடுத்துகிறது. சுரதா இக்கவிதையை எழுதுவதற்கு ஔவையின் கவிதை தூண்டுதலாய் இருந்திருக்கக் கூடும். இக்கவிதையின் மூலம் தூண்டுதல் பெற்றுப் பிறந்த மயில் கவிதை தான்பிறக்கத் தூண்டுதலாய் இருந்த கவிதையின் அளவு உயர்ந்திருக்கிறதா என்று பார்ப்பதுதான் என் நோக்கம். அதற்கு ஔவை கவிதையின் இலக்கியத் தரத்தை முதலில் முடிவுகட்டிக் கொள்ள வேண்டும்.

அகவன் மகளே அகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே, அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே

இது ஔவையின் கவிதை (குறுந்தொகை–23).

அகவல் மகள் என்பவள் குறி சொல்பவள். தலைவி மிகவும் மெலிந்து போயிருக்கிறாள். அதன் உண்மைக் காரணத்தை அறியாத தாய் குறி சொல்பவளைக் கூப்பிட்டு குறி கேட்கிறாள். அவள் சில பாடல்களைப் பாடுகிறாள். மலைவளத்தைப் புகழ்ந்து பாடுகிறாள். அதில் ஒரு பாடலாய் தலைவி காதலிக்கும் மலை நாடனுடைய மலையைப் பற்றிய பாடலும் வருகிறது. தலைவியின் நோய்க்குக் காரணம் தோழிக்குத் தெரியும். இதை எப்படியேனும் தாய்க்கு உணர்த்தி விட வேண்டும் என்பதே அவளுடைய நோக்கம். அவளுடைய நோக்கம் நிறைவேற ஒரு சந்தர்ப்பம் கிடைத்தவுடன் தோழி அதைப் பயன் படுத்திக் கொள்கிறாள். 'அகவல் மகளே, அகவல் மகளே, சங்கு மணியினால் ஆகிய கோவையைப் போன்ற

வெண்மையான நல்ல நீண்ட கூந்தலையுடைய அகவல் மகளே, பாட்டு பாடு, இன்னும் பாட்டு பாடு, அவளுடைய நல்ல நெடிய குன்றத்தைப் பாடிய பாட்டை இன்னும் பாடு' என்று குறி சொல்பவளைப் பார்த்துச் சொல்கிறாள். அப்படிப் பாடுவதன் மூலம் தலைவியின் மனம் மகிழக் கூடும். தாய்க்கும் செய்தி தெரிந்து விடும். தோழியின் நோக்கமும் நிறைவேறிவிடும். இதுதான் அவளுக்கு வேண்டியது.

குறுந்தொகையிலிருந்து பிரிந்து இக்கவிதை மட்டும் தனியாய்க் கிடைக்குமானால் இதன் பொருளையும் சுவையையும் உணர்ந்து கொள்வது கடினமாகி விடும். இக்கவிதையைப் புரிந்து கொள்வதற்கு முதலில் இது யார் கூற்று என்பது தெரிந்திருக்க வேண்டும். அக்காலத் தமிழ்க் கவிதை மரபு ஓரளவுக்கேனும் தெரிந்திருக்க வேண்டும். குறி கேட்டல் முதலிய அக்காலப் பழக்கங்களும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் இதன் சுவையை முழுதாய் உணர முடியும்.

அப்படி ஒரு மரபு இலக்கியத்தில் இருந்ததால்தான் வீணே சொற்களைச் செலவிட்டுக் கவிதையை நீட்டிக் கொண்டு போகாமல் சிக்கனமான சொற்களில் கவிதையை முடிக்க முடிந்திருக்கிறது. மிகச் சாதாரணமான சொற்கள். ஆனால், அவை உணர்ச்சிகளை அப்பட்டமாகச் சொல்லாத அளவுக்குத் திறமையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. 'பண்டைத் தமிழ் இலக்கியாசிரியர்கள், கவிகள் உணர்ச்சி வசப்படாத சாந்த ரஸத்தை மட்டும் வற்புறுத்தும் கவிதை எழுதிப் பழகியவர்கள்' என்று க. நா. சு. சங்க இலக்கியங்களைப் பற்றிச் சொல்லி இருப்பதை இங்கு பொருத்திப் பார்ப்பது நல்லது. உணர்ச்சி வசப் படாத சொற்கள் தான். ஆனால் அவை நம்மிடம் ஏற்படுத்தும் உணர்ச்சிகள் மென்மையாக இருந்தாலும் நிலைத்து நிற்பவை. இது எப்படிக் கிடைத்தது? அதற்கு, அச்சொற்களைக் கையாண்ட தோரணைதான் காரணம். அப்படி என்ன தோரணை அது?

குறி சொல்பவளை எதிரில் வைத்துக் கொண்டு அவளிடம் பேசுகிறாள் தோழி. அவள் பேசுகின்ற பேச்சுச் சந்தம் இம்மியும் பிசகாமல் அப்படியே கவிதையில் வந்து விட்டது. இன்றும் நாம் பேசும் தோரணை தான் அது. "கமலா...கமலா... பாட்டைப் பாடு. அந்தப் பாட்டைப் பாடு, அவனைப் பற்றிப் பாடினாயே அந்தப் பாட்டை இன்னும் பாடு" என்னும் அதே தோரணை; அதே சந்தம்.

கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் தோழியின் அவசரமும் தெரியும். இந்த வாய்ப்பை நழுவ விட்டு விடக் கூடாதே என்னும்

அவசரம். தாய்க்கு தலைவியின் காதலை உணர்த்தி விட வேண்டுமே என்னும் அவசரம். 'பாடு, இன்னும் பாடு, அந்த நல்ல குன்றத்தைப் பாடினதைப்பாடு' என்று திரும்பத் திரும்பப் பாடு பாடு என்பது அவளுடைய அவசரத்தைத்தான் காட்டுகிறது.

முன்பே அவள் பல பாட்டுகளைப் பாடி இருக்கிருள். அந்தப் பாடல்களில் அவள் குன்றத்தைப் பாடிய பாட்டை மட்டும் இன்னும் ஒரு முறை பாடச் சொல்ல வேண்டும். அவளோ வயதானவள். மீண்டும் ஒரு முறை பாடச் சொன்னுல் அவள் அலுத்துக் கொள்ளக் கூடும். சலித்துக் கொள்ளாமல் அந்தப் பாடலை மீண்டும் அவள் பாடவேண்டுமானுல் அவளைக் கொஞ்சம் புகழ்ந்துதான் ஆக வேண்டும். அந்தப் புகழ்ச்சி ஊட்டிய மகிழ்ச்சியில் அவள் அதைப் பாடக் கூடும். இந்த எண்ணம் தோன்றியவுடன் அவள் தலையில் அணிந்து கொண்டிருக்கும் சிறிய வெண் சங்கு மாலை கண்ணில் படுகிறது. கூடவே நரைத்த அவள் கூந்தலும் தெரிகிறது. உடனே அவள் தலையில் அனிந்திருக்கும் சங்கு மாலையையே அவள் கூந்தலுக்கு உவமையாக்கி அவளைக் கூப்பிட்டுப் பாடச் சொல்கிருள்.

உண்மையில் அவளைப் புகழ்ந்தாளா என்ருல் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். 'மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்' என்று தான் சொல்கிருள். 'நன்னெடுங் கூந்தலென்றது இகழ்ச்சிக் குறிப்பு' என்று உ. வே. சா. சொல்கிருர். நரைத்த கூந்தலை நல்ல கூந்தல் என்று சொல்ல முடியுமா? கூந்தலின் இலக்கணம் கறுத்து இருத்தல். பின் ஏன் நல்ல கூந்தல் என்று சொன்னுள்?

அகவன் மகளைப் புகழ வேண்டும் என்பது தோழியின் மனப் பூர்வமான நோக்கமல்ல. அவளை ஒரு கருவியாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்; அவள் மூலம் தாய்க்குத் தலைவியின் காதலை உணர்த்த வேண்டும் என்பது தான் அவளது நோக்கம். அகவன் மகளால் தலைவியின் காதலைப் பற்றிச் சொல்ல முடியாது என்பது தோழிக்குத் தெரியும். அகவன் மகள் சொல்லக் கூடியதெல்லாம் 'இது தெய்வக் குற்றம்' என்பது தான். காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதையாக ஏதாவது பட்டால் பட்டது. அப்படிப்பட்டதுதான் அவன் நன்னெடுங் குன்றத்தைப் பாடியது. இதற்காக அவளை புகழ்வதா?

ஒரு முறை அவள் அந்தக் குன்றத்தைப் பாடியதே தோழியின் நோக்கத்துக்குப் போதுமானதுதான். 'இன்னும் பாடுக அவர் நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டை' என்று சொன்னவுடன் தாய் கேட்கப் போகிற கேள்வி 'யார் அந்த அவர்?' என்பது தான்.

இன்னும் ஒரு முறை அகவன் மகள் பாட வேண்டும் என்பதே இல்லை. பின் எதற்காக அவளைப் புகழ வேண்டும்?

ஒருக்கால் தாய் அந்தக் கேள்வியைக் கேட்கத் தவறி விட்டால் அவள் அதை மீண்டும் பாடித்தான் ஆக வேண்டும். அவள் திரும்பப் பாடுகிற போதாவது தாய்க்கு 'அவள் ஏன் இரண்டாம் முறை சொன்னாள்; எதற்காக இவள் அதைத் திரும்பப் பாடுகிறாள்; அவர் குன்றம் என்று வேறு அழுத்திச் சொன்னாளே?' என்று தோன்றக் கூடும். இதற்காக அகவன் மகளைப் புகழ்ந்து தான் ஆக வேண்டும். ஆனால் புகழவோ மனமில்லை. அரை மனம் தான்.

ஒருத்தியைப் புகழ வந்தவள் அவளுடைய நரைத்த கூந்தலைப் புகழ்ந்து சொன்னால் அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்குமோ? அப்படிச் சொல்வது தோழி மிகவும் சாமர்த்தியமாக 'மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்' என்பதோடு நிறுத்திக் கொண்டாள். நேரிடையாக அவளுடைய கூந்தல் நரைத்திருக்கிறது என்று சொல்லவில்லை. சங்கு மணிக் கோவையைப் போன்ற நல்ல நீண்ட கூந்தல் என்று மட்டுமே சொன்னாள். அகவன் மகளுக்கு தன்னுடைய கூந்தலை அவள் நல்ல நீண்ட என்று இரண்டு அடை மொழி கொடுத்துக் கூறியதும் தான் அணிந்திருக்கும் சங்கு மணி மாலையைக் கூந்தலுக்கு உவமை சொன்னதும் மகிழ்ச்சியைக் கொடுத்து விடும். அதே நேரத்தில் அகவன் மகளைப் புகழக் கூடாது என்ற தோழியின் எண்ணமும் நிறைவேறி விடும். சங்கு மணிக் கோவையை உவமை சொன்னதால் மறை முகமாய் அவள் கூந்தல் நரைத்திருக்கிறது; செடுக்கு விழுந்திருக்கிறது; சடைபிடித்திருக்கிறது என்று சொல்லி விட்டாள் அல்லவா? கூந்தல் இலக்கணத்துக்கு மாறுபட்டதை 'நல்ல கூந்தல்' என்று இகழ்ந்து விட்டாள் அல்லவா? நரைத்த கூந்தல் நீண்டு தொங்கினால் என்ன; பிடரியை எட்டுவதற்குத் தடுமாறினால் தான் என்ன?

'அவர் நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டைப்பாடு, என்று தானே தோழி சொன்னாள். அகவன் மகளுக்குத் தலைவியின் காதலைப் பற்றித் தெரியாதே. பிறகு அவர் குன்றம் என்று சொன்னால் அவள் எந்தக் குன்றத்தைப் பற்றிப் பாடுவாள்' என்று கேட்கத் தோன்றும். இவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டிருக்கும் தோழி அவள் அவனுடைய குன்றத்தைப் பாடிப் பிறகு நான்கு குன்றங்களைப் பாடி முடிக்கும் வரையில் கேட்டுக் கொண்டிருப்பாளா? அந்தக் குன்றத்தைப் பாடி முடித்தவுடனே அதைத் திரும்பப் பாடச் சொல்லி விடுவாள். அவர் குன்றத்தைப் பாடு இன்னும் என்று சொன்னதும் அவள் 'அவர்' என்ற சொல்லைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிராமல் கடைசியில் பாடிய பாடலைத்தான் பாடுவாள். இது

இப்பொழுது மேடையில் பாடிக் கொண்டிருக்கும் பாடகனைப் பார்த்து 'ஒன்ஸ் மோர்' கேட்கிற வியவகாரம் தான். ஒன்ஸ் மோர் கேட்டதும் பாடகன் முன்பு பாடிய பாடல்களில் ஒன்றையா எடுத்துப் பாடுவான்?

தாய்க்குத் தலைவியின் காதலை உணர்த்தத் தோழி பயன் படுத்திய சொல் ஒன்றே ஒன்று தான். அதுவே போதும் என்னும் போது இன்னும் ஒரு சொல்லை இழப்பது இலக்கியத்தைப் பொறுத்த வரையில் அதிகப் படியானது. அதன் தரத்தைக் குறைப்பது.'அவர் யார்? என்னும் ஆராய்ச்சி தாயரிடையே பிறந்து உண்மை யறிதற்கு ஏது வாமாகலின் இஃது அறத்தொடு நிற்றலாயிற்று' என்று இதைப் பற்றிச் சொல்கிருர் உ. வே. சா. உண்மையில் அவள் பயன் படுத்தியது ' அவர்' என்ற சொல் மட்டுமே.

இத்தனை விஷயங்களையும் சொல்வதற்கு ஔவை பயன் படுத்தியவை 5 வரிகள், 25 சொற்கள் (20 சீர்கள்). இதற்குள் அவர் சொல்ல நினைத்தது எல்லாவற்றையும் முழுமையாகச் சொல்லி விட்டார். கவிஞன் தான் எண்ணியதை அப்படியே ரசிகனும் எண்ணிப் பெற வைக்க முடிந்தது என்பதே கவிதையின் வெற்றி. பயன் படுத்திய சொற்கள் துல்லியமாய் நினைத்ததை அப்படியே சொல்கின்றன. ஒவ்வொரு சொற்களாய் இணைந்து கவிதை உருவாகிக் கொண்டு போகும் போதே அந்தச் சொற்களுக்குப் பின்னணியில் ஒரு காட்சி உருவாகி வளர்ந்து கொண்டே வருகிறது. இது கவிஞனின் திறமையைக் காட்டுகிறது.

ஔவையின் கவிதையை நினைவுபடுத்தும் மயில் கவிதையை ஔவையின் கவிதையைப் பார்த்ததைப் போல இவ்வளவு தூரம் பார்க்க வழியில்லை. மலையேறி மயில் பிடிக்கப் போனவர் முதல் அடியிலேயே சறுக்கி விழுந்து விட்டார். மயிலைக் கூப்பிட்டு,அதை முன்னிலை யாக்கிக் கொண்டு ' அகவும் மயிலே! அகவும் மயிலே!' என்று கவிதையைத் தொடங்குகிருர். மயிலைக் கூப்பிட்டு அதன் புகழ் பாட இவருக்கு என்ன தேவை ஏற்பட்டது? ஔவை அந்தக் கவிதையை அப்படித் தான் தொடங்கி இருக்க முடியும். ஆனுல் இவருக்கு மயிலைக் கூப்பிட்டுச் சொல்வது தவிர்க்க முடியாததில்லை. இவர் கவிதையை வாசகனிடம் நேரிடையாகச் சொல்லி இருக்கலாம். அப்பொழுது சில சொற்களேனும் மிச்சமாகி இருக்கும்.

சரி, மயிலை முன்னிலைப் படுத்திச் சொல்லியதை ஏற்றுக் கொள்வோம். ஆனுல், அந்தக் கவிதையில் வந்த பேச்சுச் சந்தமும் தோரணையும் இதில் வருகிறதா? அகவன் மகளை முன்னிலைப் படுத்திய வுடன் பேச்சுச் சந்தமும் தோரணையும் வரவேண்டியது

இலக்கியத்தின் நியதி என்பதை ஔவை புரிந்து கொண்டதைப் போல இவர் புரிந்து கொள்ள வில்லை. முதல் அடியைத் தவிர மற்ற எந்த அடியிலும் பேச்சுச் சந்தம் வரவேயில்லை. கடைசி அடியிலும் அந்தச் சத்தம் சரியாகப் பிடிபடவே இல்லை. நழுவி ஓடி விட்டது தான் தெரிகிறது.

ஒரே ஒரு கேள்வி உனை நான் கேட்கிறேன்
ஆடுங்கலாபமே! அருகில் வா இதைக்கேள்

இப்படி மயிலை அடிக்கடிக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார். முதலில் கூப்பிட்டதே போதாதா? அதன் கவனம் வேறு பக்கம் திரும்பி விடும் என்று நினைக்கிறாரா கவிஞர்? அப்படி கவனம் இல்லாததை ஏன் இவர் கவிதை கேட்கக் கூப்பிட்டிருக்க வேண்டும்?

ஆடுகின்றனை ! அதுசரி, தோகையால்
ஈர முகிலினை ஏன் விசிறு கின்றனை?

"ஆடுகின்றனை ! அதுசரி" என்ப தெல்லாம் அதிகமான சொற்கள். அதுசரி என்று இடையில் போடுவதால் பேச்சுச் சந்தம் வந்து விடாது. தேவைக்குப் போதிய சொற்களுக்குள் பேச்சுச் சந்தம் வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதை விட்டு வெளியிலிருந்து அந்தச் சந்தத்தைக் கொண்டு வர முயல்வது கவிதையை நீர்க்கச் செய்து விடும். கவிஞனின் தோல்வியைப் பிறந்த மேனிக்கு வெளியில் காட்டிவிடும். ஔவை தன் கவிதையில் செய்ததைச் செய்ய வேண்டும். அப்பொழுது தான் அந்தச் சந்தம் வரும்.

கருவுற்ற முகிலைக் கண்டதும் நீயோ
ஆடுகின்றனை! அதுசரி, தோகையால்
ஈர முகிலினை ஏன் விசிறு கின்றனை?

மயில் தோகையால் முகிலை விசிறுவதாகத் தோன்றுகிறது கவிஞருக்கு. அது சிரிப்புக்கிடமான செயலாகவும் இவருக்குப் படுகிறது. உடன்

சுரந்திடும் ஊற்றுநீர் சுடுமென் றெண்ணி
விசிறுவார் உண்டோ ஓலை விசிறியால்?

என்று கேட்கிறார். திடீரென இந்தச் சிந்தனை ஏன் வந்தது? முதலிலேயே ஈர முகில் என்று சொன்னதிலேயே அவர் சொல்ல நினைத்தது வந்து விட்டது. சுடுவதைத் தான் எல்லோரும் விசிறுவார்கள். குளிர்ந்திருப்பதை விசிறுவது சிரிப்புக் கிடமான செயல். இருந்தாலும்கவிஞர் ரசிகனுக்கு சிரமம் வைக்க விரும்பவில்லை

போலத்தெரிகிறது. அதனுல் அதை வெளிப்படையாகச் சொல்லி விட்டார் போலும். இப்படிச் சொல்ல நினைத்தபோது ஓர் உவமை கிடைத்திருக்கிறது அவருக்கு; அந்த உவமையையும் விட மனமில்லை.

அப்படி உவமை சொல்லும் போது மயில் ஈர முகிலினை விசிறுவதற்கு ஓலை விசிறியால் ஊற்று நீரை விசிறுவதைச் சொல்வதோடு, மேலும் ஒன்றைச் சேர்த்துச் சொல்கிருர். ஊற்றுநீர் சுடுமென்று எண்ணி விசிறுவார் உண்டோ என்பதோடு நிறுத்திக் கொண்டிருந்தால் மட்டும் போதுமானது. சுரந்திடும் ஊற்று நீர் என்றும் ஓலை விசிறியால் விசிறுவார் என்றும் சேர்த்துச் சொன்னதால் மேலும் ஓர் உவமை இடையில் வந்து குதிக்கிறது. உலை நீரை ஊற்று நீருக்கு உவமைப் படுத்தி இருக்கிருர் என்று தெரிகிறது. உலையில் நீர் கொதித்துக் கொண்டிருக்கும் போது வரும் கொதியைப் போல ஊற்றில் நீர் ஊறிவரும். இரண்டும் ஒத்துப் பார்க்க வேண்டியவை தான். ஆனுல் அந்த உவமையையும் சரிவரக் கொண்டு வரவில்லை. சுரந்திடும் என்ற சொல் அதைக் கொண்டுவரத் தவறிவிட்டது. 'விசிறுவார் உண்டோ ஓலை விசிறியால்' என்ற தொடர் உலை நீரை நினைவுக்குக் கொண்டு வருகிறது. அதைப்போல சுரந்திடும் ஊற்று நீர் என்பதால் ஊற்றில் நீர் பொங்கி எழுவதைக் காட்ட முடியவில்லை. சுரந்திடும் என்று சொல் தண்ணீர் மெல்ல ஊறி வருவதை மட்டுமே காட்டச் சக்தி படைத்தது. அதற்குமேல் அதன் சக்தி செல்லுபடி யாகவில்லை. பொங்கும் குறிப்பைத் தரும்படி அந்த வரி சரியாக அமைக்கப் படவில்லை. ஊற்று நீர் சுடுமென்று எண்ணியது மட்டுமல்ல, உலை நீரை விசிறிக் கொதி தணித்து விடலாம் என்பது கூட சிரிப்புக் கிடமான செயல் தான்.

இத்தனை தூரம் இந்த வரிகளுக்குள் போகக் கூடாது என்று யாரேனும் சொல்லக் கூடும். ஈரமுகில் என்பதோடு நிறுத்திக் கொண்டிருக்க வேண்டியதை நீட்டி சுரந்திடும் ஊற்றுநீர் சுடுமென்று ஓலை விசிறியால் விசிறுவார் உண்டோ என்று கேட்டதால் உள்ளே நுழைந்து ப்ர்க்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

> அஃறிணை மயிலே! ஆராய்ந்து பார்த்துச்
> செய்வதைச் செய்தால் சிரிப்புக் கிடமில்லை
> என்பதை அறிக!

என்கிருர். என்பதை அறிக (!) என்று சொல்ல வேண்டியதில்லை. ஆராய்ந்து பார்த்துச் செய்வதைச் செய்தால் சிரிப்புக் கிடமில்லை என்று சொன்னுலே போதும்.

மயில் சிரிப்புக் கிடமானதைச் செய்கிறது என்று சொன்னவர்

'ஆட்டுக தோகையை' என்று சொன்னதால் அவரே சிரிப்புக்கிடமானதைச் செய்து விட்டார். மயில் தோகையை ஆட்டுகிறது என்று சொல்வதில்லை. அப்படிச் சொன்னால் அது நாய் வாலை ஆட்டுகிறது என்பதைப் போலத் தான் ஒலிக்கும். வாலை ஆட்டுதல் நாயின் குணம். தோகை விரித்தாடுதல் மயிலின் குணம். அப்படிச் சொல்வதுதான் அழகாகவும் இருக்கிறது. இது ஔவைக் கவிதையின் கடைசி அடியை அப்படியே பின் பற்றிப் போனதால் விந்த விளைவு.

இயற்கையை ரசித்து அதன் தூண்டுதலால் இக்கவிதை தோன்றியிருக்கிறது என்று சொல்வதற்கு இக்கவிதையில் இடமேயில்லை. இதன் பெரும்பாலான பகுதிகள் சங்க இலக்கியத்தின் தூண்டுதலால் விளைந்தவை. ஒன்றன் தூண்டுதலால் ஒன்று தோன்றக் கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. தூண்டுதலாய் இருந்ததையே எடுத்து அதன் விளைவுஎன்று தருவது இலக்கியமாகாது என்றுதான் சொல்ல வருகிறேன். (அப்படி அது இலக்கியமாக வேண்டுமானால் தூண்டுதல் காரணமாய் இருந்ததில் குறைகள் இருந்திருந்தால் அதை நீக்கித் தூயதாய் வேகம் உள்ளதாய் அது ஆக்கப்பட்டிருக்க வேண்டும்.)

'கைவிரல் போன்ற காந்தள் அரும்பெலாம்' என்ற வரியை எடுத்துக் கொள்வோம். இதில் என்ன புதுமை இருக்கிறது? எத்தனையோ கவிஞர்கள் சங்க காலம் முதல் காந்தளை கைவிரலுக்கு உவமை சொல்லி வருகிறார்கள். (உதாரணமாக:- காந்தள் மெல் விரல். கூடலூர் கிழார் - குறுந்தொகை-167) அதில் தன்னையும் ஒருவராகச் சேர்த்துக் கொண்டதுதான் சுரதா செய்திருக்கும் புதுமை! கைவிரலை காந்தளுக்கு உவமை சொன்ன பிறகு வரும் 'நிமிர்ந்து நின்றெரியும் நெருப்பென மலர' என்ற அடி வேகம் பெறாமல் போய் விட்டது. காந்தளுக்குப் பதில் வேறு ஒரு பூவைச் சொல்லி அது 'நிமிர்ந்து நின்று எரியும் நெருப்பென மலர' எனச் சொல்லியிருந்தால் எடுப்பாக இருந்திருக்கும்.

ஆடும் பறவைநின் அடிகள் இரண்டும்
ஈர நொச்சியின் இலைகளே யாகும்!

மயிலின் விரிந்த அடியின் விரல்களை நொச்சியின் விரல்களாய் விரிந்த இலைகளுக்கு ஒப்புமை காட்டுவது மிகவும் அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்த அழகினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அனுபவித்துக் கவிதையாக்கி விட்டுப் போய் விட்டார் கொல்லன் அழிசி.

"மயிலடியிலைய மாக்குரனொச்சி" என்று கவிஞன் கொல்லன் அழிசி எழுதிய அடி குறுந்தொகையில் 138 ஆம் பாடலில் மூன்ரும் அடியாய் வருகிறது. 'மயிலின் அடியைப்போன்ற இலையையுடைய கரிய பூங்கொத்தையுடைய நொச்சி' என்று பொருள். அக்கவிஞன் இரண்டையும் ஒப்புமை காட்டப் பயன்படுத்திய சொற்கள் ஐந்து; சீர் நான்கு; அடி ஒன்று. ஆனால் அதற்குள் நொச்சியை நம் மனம் அழுத்தமாய் வாங்கிக் கொள்ளும்படி இரண்டு அடைமொழியையும் சேர்த்துகிருர். ஆனால் கவிஞர் சுரதா இதே செய்தியைச் சொல்ல எடுத்துக்கொண்ட சொற்கள் எட்டு. வரிகள் இரண்டு. மயிலுக்கு அடிகள் இரண்டு என்று வேறு நமக்கு நினைவூட்டுகிருர். இதுபோல் தேவை இல்லாதவைகளை நினைவூட்டுவதால் கவிதையின் இறுக்கம் கெட்டுப்போய் விடும்.

மயிலின் உச்சிக் கொண்டையை 'கண்ணைக் கவர்ந்திடுங் காயா மலர்கள்!' என்று சொல்கிருர். சங்க காலத்துக் கவிஞர்கள் மயிலின் கொண்டையை வாகை மலருக்கு ஒப்பிடுகிருர்கள். காவிரிப்பூம் பட்டினத்துச் சேந்தங்கண்ணன் என்ற கவிஞர்

குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியிற் ரேன்றும்

என்று சொல்கிருர். இது குறுந் தொகை 347 ஆம் பாடலில் இரண்டாம் மூன்ரும் அடிகளாய் வருகிறது. 'இளமையுடைய வாகை மரத்தின் கொம்பின் கண் உள்ள நறிய மலர், மடப்பத்தை யுடைய கரிய மயிலினது உச்சிக் கொண்டையைப் போலத் தோன்றும்' என்பது பொருள்.

புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயி லெருத்திற் ரேன்றும்:

இது ஔவையாருடையது. குறுந்தொகை 183 ஆம் பாடலின் ஐந்தாம் ஆரும் வரிகள். 'மழை பெய்வதற்கு முன் பொலிவழிந்திருந்த காயாவினது மலர்கள் பொருந்திய பெரிய கிளை மழை பெய்த பின் மெல்லிய மயிலினது கழுத்தைப் போலத் தோன்றும்' என்பது பொருள். மலர்கள் பொருந்திய காயாவினது கிளையை மயிலின் கழுத்திற்கு உவமை சொன்னதால் அதன் மலர்கள் மயிலின் கொண்டைக்கு உவமையாய்த் தானே பெறப்படுகின்றன. இதைத் தான் சுரதா தன் கவிதையில் பயன்படுத்துகிருர். இப்படி முன்பே பல கவிஞர்கள் பலவேறு இடங்களில் பயன் படுத்திய உவமைகளை எடுத்து நீர் விட்டுத் தருவது எப்படி இலக்கியமாகும்? இது சங்க இலக்கியங்கள் அறிமுகமில்லாத வாசகர்களுக்கு மயக்கத்தைத் தரும்; அவ்வளவுதான்.

தேவைக்கு அதிகமான செய்திகளும் சொற்களும் கவிதை முழுதும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. மயிலின் விழி நீலம்; அதன் தோகை நீளம்; அதன் உடல் மரகதம் என்று சொல்வது கவிதைக்குத் தேவையில்லாத சரக்கு. ஓவியம் வரைபவன் அதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். மயில் கழுத்து கோழியின் கழுத்து ஆகாமல் பார்த்துக் கொள்ள அவனுக்குத்தான் தேவையது, கவிஞருக்கு அல்ல.

கவிஞர் சுரதா சங்க இலக்கியங்களில் நல்ல பயிற்சி உள்ளவர். இடைக்கால நூல்களில் பெரும்பாலானவை அவருக்குத்தெரியும். இந்த நூற்ருண்டின் ஆரம்பகாலத்தில் பாரதியார், இடைக்காலத்தில் தமிழ்க்கவிதையைச் சுற்றிக் கட்டப் பட்டிருந்த பல வேலிகளை வெட்டி வீழ்த்திப் புதிய வழி திறந்து கொடுத்து விட்டுப் போய் இருக்கிருர். அவரைப் பின்தொடர்ந்து அந்தப் பாதையில் நடந்து பழக்கப் படுத்தினுர் பாரதிதாசன். இவரோ–சுப்புரத்தனதாசன்–அதாவது பாரதிதாசனின் தாசன். ஆக இவருக்கு இரண்டாயிரம் ஆண்டுத் தமிழ்க் கவிதை மரபு நன்ருகத் தெரிந்திருக்கும். அதன் வளர்ச்சியும் தேய்வும் இவருக்குப் புரிந்திருக்கும். புரிந்திருக்க வேண்டும்.

இலக்கிய வளர்ச்சி என்பது தனக்கு முந்திய மரபைப் புரிந்து கொண்டு ஒரு அடி முன் எட்டிவைத்துப் புதிய மரபை ஏற்படுத்துவதுதான். இப்படிச் சென்ற பாதையில் சென்று திரிந்து கிடைத்த சரக்கை எடுத்துக் கலந்து தருவதல்ல. இதைப் புரிந்து கொள்ளும்போதுதான் இலக்கிய மறுமலர்ச்சி தோன்றுகிறது.

நிலவுப்பெண்

இரா. அருள்

கடல் நன்செய்க் கரும்புமலர்
தாளிசைத்துச் சதிராடும்
எழில்நோக்க நிலவுப்பெண்
நீலக்கலை நெகிழவந்தாள்.

திரைப்பாடல்

செல்வம்

தமிழ் நாட்டில் சுவைப்பு வளர்ந்த அளவுக்குத் தெளிவான இலக்கியத் திறனாய்வு வளரவில்லை என்றே சொல்ல வேண்டும். இதனால் இலக்கிய மதிப்பீட்டில் பல வகையான விருப்பு வெறுப்புக்கள் இடம் பெற்று விட்டன. இந்த விருப்பு வெறுப்புக்களில் சில ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பொதுவானவை; சில தனி மனிதனுக்கு மட்டும் உரியவை. இவற்றில் சிக்கிக்கொண்டு 'ஒரு படைப்பைப் படைத்தவன் யார்?' என்றும், 'அது எதற்காக எழுந்தது?' என்றும், 'எப்படி எழுதப்பெற்றது?' என்றும் கேட்போர் பலர். இக்கேள்விகள் அப்படைப்பைப் புரிந்துகொள்ளத் துணைசெய்யலாம்; என்றாலும் அவை இலக்கிய மதிப்பீட்டுக்குத் தேவை அற்றவை என்று தான் சொல்ல வேண்டி இருக்கிறது.

இன்று ஒரு குறிப்பிட்ட படைப்பை உற்று நோக்கி ஆராய்ந்து சரியான மதிப்பீட்டுக்கு வராமல், இத்துணைக்கேள்விகளைக் கேட்டுத் தமது விருப்பையும் வெறுப்பையும் இலக்கிய மதிப்பீடாக்கிச் சிலரது படைப்பையும் சில வகைப் படைப்பையும் மொத்தமாகப் பாராட்டு வதோ, மொத்தமாக ஒதுக்கித் தள்ளுவதோ உண்டு. இவ்வாறு தான் பலர் திரைப்பாடலை இலக்கியமாகக் காண்பதில்லை; மாறாக குப்பை என்று ஒதுக்கி வைக்கின்றனர்.

திரைக்காக எழுதப் பெறாமல், கவிதைக்காகவே எழுதப்பெற்ற படைப்புக்களில் சில வெறும் செய்யுள் நிலையை விட்டு உயராமலே நின்றுவிடுகின்றன; கவிதையாக எழுதப் பெறாமல், திரைக்காகவே எழுதப்பெற்ற பாடல்களில் சில தம்நிலையை விட்டு உயர்ந்து கவிதையின் மதிப்பை அடைந்து விடுகின்றன. செய்யுளைக் கவிதை என்று சிறப்பிப்பது தவறு; அதைப் போலவே கவிதையைப் பாடல் என்று சொல்லி நிறுத்திக் கொள்வதும் தவறுதான். முதல் தவற்றை உணர்ந்ததுபோல் இரண்டாம் தவற்றையும் சிலர் உணராத காரணத்தால் எழுந்தது இக்கட்டுரை.

2. திரைப்பாடலைப் பற்றி சொல்லப்படுகின்ற சில பொதுக் குறைகளை முதலிலேயே பார்த்து விடுவது நல்லது.

எதுகை மோனை சரியாக இருப்பதில்லை என்பது ஒரு குறை. இது பொதுவான உண்மையல்ல என்பதைச் சுட்டிக்காட்ட சில எடுத்துக் காட்டுக்களைக் கீழே தருகிறேன்:

1 கண்டால் கொல்லும் விஷமாம்
கட்டழகு மங்கையரை–நான்
கொண்டாடித் திரியாமல்
குருடாவது எக்காலம்.

—உடுமலை நாராயணகவி: தூக்குத்தூக்கி

2. விதியென்னும் குழந்தைகையில் உலகந் தன்னை
விளையாடக் கொடுத்துவிட்டாள் இயற்கை அன்னை

—ப. கல்யாண சுந்தரம்: தங்கப்பதுமை

3. தித்தித் தாலது செம்பொற் கிண்ணம்
தத்தித் தாவிடும் தங்கக் கிண்ணம்
சித்தத் தாலொரு காதற் சின்னம்
பற்றித் தாவென பாவையின் முன்னம்

—கண்ணதாசன்: திருவருட்செல்வர்

திரைப்பாடலைக் கேட்கும்போதே கூட எதுகை மோனை பரவிக் கிடப்பது புலனாகும். சில ஆண்டுகளாக இவை மிக அதிகமாகத் தென்படுகின்றன என்பது இன்னொரு செய்தி. அது மட்டுமல்ல; பல பாடல்களில் இயைபுத் தொடையும் அமைந்திருக்கின்றது.

அணிநயம் இல்லை என்பது மற்றொரு குறை. மேலே குறிப்பிட்டுள்ள எடுத்துக் காட்டுக்களிலேயே அணிநயம் இருப்பதைக் காணலாம். அணிவகைகளில் மிகுதியாகப் பயன் பெறுவது உவமையும் உருவகமுமே. இனக்கவர்ச்சி அடிப்படையில் எழுந்து பல பாடல்களில் இழையோடுகின்ற சிலேடை நயத்தையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

புத்தம் புதிய புத்தகமே–உன்னை
புரட்டிப் பார்க்கும் புலவன் நான்

—வாலி: அரசகட்டளை

என்பது இதற்கோர் தரமான எடுத்துக்காட்டு. சில வழுக்கி விழுவதும் உண்டு; அவற்றில் ஒன்று பின் வருவது:

ஆட்டுக்கும் மாட்டுக்கும் ரெண்டு கொம்பு–இந்த
ஆம்பிளைக் கென்னடி அக்குறும்பு

—வாலி: கண்கண்ட தெய்வம்

3. மனதில் தோன்றிய கருவைப் படைக்காமல், திரைக்கதையில் வருகின்ற ஒரு காட்சிக்கோ பாத்திரத்திற்கோ ஏற்ப எழுதப் பெறுவதால் திரைப்பாடல் இலக்கியமாகாது என்பது ஒரு கருத்து. இது போன்ற பொதுப்படையான கருத்து முறையான இலக்கிய மதிப்பீடு ஆகாது.

திரைப்பாடல் எழுதாது கவிதையாக எழுதுகின்ற கவிஞருக்குக் கிடைக்கின்ற கருக்களை விட மிகுதியான கருக்கள், பலவகைப்பட்ட கருக்கள் திரைக்கவிஞருக்குக் கிடைக்கின்றன. இதற்குக் காரணம் திரைக்காட்சியும் பாத்திரமும் பாடலின் கருவைத் தீர்மானிப்பது தான். இந்த வகையில் பார்க்கும்போது கவிஞருக்குக் கிட்டும் வாய்ப்புக்களைவிடத் திரைக் கவிஞருக்குக் கிட்டுபவை அதிகம். கவிதையனுபவ வட்டம் அதிகரிக்க அதிகரிக்கத்தான் கவிஞரின் அனுபவ ஆழமும் பரப்பும் தெரியவரும்.

காதல், சோகம், தாலாட்டு, தத்துவம், நகைச்சுவை என்னும் ஐந்து வகையைத்தவிர வேறு என்ன உண்டு என்று கேட்கத் தோன்றலாம். பொதுவாக ஐந்து வகை தெரிந்தாலும், ஒவ்வொரு வகையிலும் பல விதங்களும் மனநிலைகளும் தென்படுகின்றன. எடுத்துக்காட்டாக, காதல் வகையில் 'காலங்களில் அவள் வசந்தம்' என்பதற்கும் 'சக்கரைக்கட்டி ராசாத்தி' என்பதற்கும் இடையில் எவ்வளவோ வேறுபாடு உண்டு; தத்துவ வகையில் 'உடலுக்கு உயிர் காவல்' என்பது ஒரு விதம்; 'கண்போன போக்கிலே கால் போகலாமா' என்பது மற்றொரு விதம். இவ்வாறு நோக்கினால் திரைப்பாடலில் திருப்திதரும் செய்தி உண்டு.

இன்னொரு சிறப்பும் திரைப்பாடலில் புலனாகின்றது. கதையின் இடையில், காட்சிச் சூழலில், பாத்திரவாயிலாகப் பாடல் எழுவதால் திரைப்பாடலில் நாடக இயல்பு கிட்டுகின்றது. இங்கே படர்க்கைக் கூற்று அதிகமாக இருப்பதில்லை; தன்மைக் கூற்றுத்தான். இந்தத் தன்மைக் கூற்றும் கவிஞரின் கூற்றல்ல; பாத்திரக் கூற்று. திரைக் கவிஞன் தனது ஆளுமையை வெளியிடுவதில்லை; மாறாக, தனது ஆளுமையை விட்டு விலகி, குறுந்தொகைக் கவிஞரைப்போல பாத்திரத்திற்கேற்ப எழுதுகிறார்.

சங்க இலக்கியத்தில் சில கவிதைகளின் முதல் வரிகள் பாத்திரத்தின் உணர்ச்சியை அல்லது மனநிலையை அப்படியே வடித்துக் கொடுத்து விடும்.

முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்

என்னும் குறுந்தொகைக் கவிதையும்

ஏஎ ! இஃது ஒத்தன்: நாணிலன்

என்னும் கலித்தொகைக் கவிதையும் இதற்கு மேற்கோள் ஆகும். இந்த நயத்தை இன்று திரைப்பாடலில் தெளிவாகக் காணமுடியும். 'போனல் போகட்டும் போடா' (கண்ணதாசன்), 'என்னடி இத்தனே வேகம்' (ஆலங்குடி சோமு), 'அவளா சொன்னுள், இருக்காது' (வாலி) என்று தொடங்கும் பாடல்களே எடுத்துக் காட்டுக்களாகக் கொள்ளலாம்.

4. இவ்வாறு திரைப்பாடலில் பலவகை நிறைகள் இருந்தாலும் எல்லா பாடல்களும் முழுமை பெற்று விளங்குவதில்லே. இதற்குச் சில காரணங்கள் புலனுகின்றன. ஒழுங்கான வளர்ச்சி யின்மை, தரத்திலே ஏற்ற தாழ்வு, எடுத்தாண்ட உவமையிலே அமைதியின்மை என்று சிலவற்றைச் சொல்லலாம். இவற்றில் இரண்டாவது காரணந்தான் பல பாடல்களைக் கவிதையாவதி லிருந்து தடுக்கின்றது. எனவே இதை மட்டும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

சில பாடல்கள் மிக அருமையான தொடக்கத்தை மட்டுமே கொண்டுள்ளன.

1. அமுதும் தேனும் எதற்கு—நீ
அருகினில் இருக்கையிலே எனக்கு

—சுரதா: தைபிறந்தால் வழிபிறக்கும்

முகத்தில் முகம் பார்க்கலாம்—விரல்
நகத்தில் பவழத்தின் நிறம் பார்க்கலாம்

—கல்யாணசுந்தரம்: தங்கப்பதுமை

மலரைப் பறித்தாய்
தலேயில் வைத்தாய்
மனதைப் பறித்தாய்
எங்கே வைத்தாய்

—திருச்சி தியாகராஜன்: செங்கமலத்தீவு

என்பவைகளிலுள்ள எடுப்புத்தரம் தொடுப்பிலும் முடிவிலும் சரிந்து விடுகின்றது.

சில பாடல்களின் எடுப்பும் முடிப்பும் நன்ருக இல்லாது தொடுப்பு மட்டும் நயமாக இருப்பதுண்டு.

1. அரும்புகள் மலர்ந்து வந்தால்—அந்த
அழகினை ரசிப்பதுண்டு
பருந்துகள் திருட வந்தால்—அந்தப்
பண்பினைப் பொறுப்ப துண்டோ?

—சோமு: நான் ஆணையிட்டால்

2. சிப்பி பிளந்தது சிப்பி பிளந்தது
செங்கனித் துண்டாக; அதில்
முத்து விளைந்தது முத்து விளைந்தது
மல்லிகைப் பந்தாக

—மாயவநாதன்: தேர்திருவிழா

போன்ற அழகிய வரிகள் இடையில் மட்டுமே மிளிர்கின்றன.

இன்னும் சில பாடல்களில் முடிவு மட்டுமே இலக்கியத்தரமாக அமைந்திருக்கும்.

1. குளம் நிறைந்தால் ஜலம் வழிந்தே
வேறு வழியேகும்
குமுறிப் புகையும் எரிமலையும்
ஓர் நாள் அமைதியாகும்
மனதில் பொங்கும் துயரவெள்ளம்
வடியும் நாளேது

—நாராயணகவி: தேவதாஸ்

2. வானம் போல நீயிருந்தாய்
வையம் போல நானிருந்தேன்
மண்ணில் வீழ்ந்த
மழைத்துளி போல நம்வாழ்க்கை
கண் கலந்தது காதலினாலே

—கண்ணதாசன்: ஒரே வழி

இவ்வாறு வருகின்ற முடிவைத் தவிர மற்ற பகுதிகள் சதைப்பற்று எதுவுமின்றி எலும்புக் கூடாகத் தோன்றும்.

இதுவரை சுட்டிக்காட்டியது போல ஓரிரு இடங்கள் சிறப்பாகவும் குறையுடனும் இருப்பதால் பல பாடல்கள் கவிதை யாகும் பேறு பெறுவதில்லை. இன்னும் சில பாடல்கள் சொன்னதையே திருப்பித் திரும்பச் சொல்வதாகவும், வெறும் வார்த்தைப் பந்தலாகவும், பொருளமைதி அற்றதாகவும் இறுக்கமற்றுத் தளர்ந்ததாகவும் இருந்து விடுகின்றன. ஆனால் சில பாடல்கள்

எல்லா குறைகளிலிருந்தும் ஒரு குறிப்பிட்ட தரத்திற்குக் கீழே சரியாமல், இலக்கிய நயத்தோடு நிற்கின்றன. இக்கருத்து மிகைப் படக் கூறுவதாகத் தோன்றும்; இதற்காகவே இரண்டு மேற்கோளை முழுமையாகத் தர விரும்புகிறேன்.

அவளா சொன்னாள் இருக்காது
அப்படி எதுவும் நடக்காது
நடக்கவும் கூடாது
நம்ப முடியவில்லை
உள்ளத்தில் உள்ளது உதட்டிலே வந்ததா
நம்ப முடியவில்லை
இல்லை இல்லை இல்லை
உப்புக் கடல்நீரும் சர்க்கரை ஆகலாம்
முப்பது நாளிலும் நிலவைப் பார்க்கலாம்
சுட்ட உடல்கூட எழுந்து நடக்கலாம்
நீசொன்னது எப்படி உண்மை ஆகலாம்
அன்னை தந்தபால் விஷமும் ஆகலாம்
என்னைப் பெற்றதாய் என்னைக் கொல்லலாம்
நீ சொன்னது எப்படி உண்மை ஆகலாம்

—வாலி: செல்வம்

உணர்ச்சி மயமான உரத்த கற்பனை வேகமாக, ஒழுங்காக, இறுக்கமாக வருவதற்கு இது ஓர் அருமையான எடுத்துக்காட்டு. அடுத்து வருகின்ற கவிதையில் கம்பீரமான கற்பனை நிதானமாக வருவதைக் காணலாம்.

அவன் நினைத்தானு இது நடக்கும் என்று
அவன் நினைக்குமுன்னே பழம்பழுக்கும் என்று
நல்ல ஆற்றங் கரைதனில் காற்றுவரும்
அது யாரிடம் என்று பார்த்துவரும்
நெஞ்சின் ஆசை யிலேதேன் ஊறிவரும்
அது ஊர்வலம் சென்று தேடிவரும்
அன்று எங்கிருந் தோஒரு ஏழை வந்தான்
அந்த ஏழைஉன் கோவிலை நாடி வந்தான்
நல்ல காவல் கொண்டாய் நீகை கொடுத்தாய்
அவன்காத் திருந்தான் இன்னும் கனியும் என்று
உன்னைப் பார்த்தவன் மனதில் பசியிருக்க
அவன் பார்வையில் ஆயிரம் இசையிருக்க
ஏன் நேற்றுவந்தான் உன்னைக் கலங்கவைக்க

—கண்ணதாசன்: செல்வமகள்

திரைப்பாடலை மதிப்பிடுவதற்குத் தடையாக இருப்பது அதனுடைய மெட்டுதான். மிகச் சாதாரணமான பாடலைப் பிரமாதப்படுத்தியும், நல்ல கவிதையைச் சாதாரணமாக்கியும் காட்டிவிடும் சக்தி மெட்டுக்கு உண்டு. எனவே ஒரு பாடலைக் கண்ணால் கண்டு படிக்கும்போதுதான் அதன் உண்மையான இயல்பு தெரியவருகிறது. இப்படிப் படிப்பதற்குத் துணைசெய்யும் வகையில் ஒவ்வொரு திரைக்கவிஞரின் பாடல்களில் சிறந்தவற்றைத் தேடியெடுத்துத் தொகுத்து வெளியிட்டால் சரியான இலக்கிய மதிப்பீட்டுக்கு வழிசெய்ததாகும்; அதோடு வாசகருக்கு இலக்கிய விருந்தாகவும் அமையும்.

திரைப்பாடல் தொகுதிகளை வெளியிட வேண்டியதற்கு மற்றொரு காரணமும் சொல்லலாம். திரைப்பாடல்களை இலக்கியமல்ல என்று புறக்கணிக்க முடியாதது மட்டுமல்ல; இந்த நூற்றாண்டில் தோன்றிய சிறந்த கவிதைகளின் தொகுதியில் சில திரைப்பாடல்களும் இடம் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

Statement about ownership and other particulars about

Form IV] **NADAI** **[See Rule 8**

1.	Place of Publication :	Salem
2.	Periodicity of its Publication :	Quarterly
3.	Printer's Name : Nationality : Address :	R. Duraisamy Indian No. 1, North Muniappan Koil Street Karungalpatti, Gugai, Salem-6.
4.	Publisher and Editor's name : Nationality : Address :	G. Krishnasamy Indian 40 Nathamar Street, Salem-3.
5.	Name and address of individuals who own the newspaper and partners or Shareholders holding more than one percent of the capital	G. Krishnasamy 40 Nathamar Street, Salem-3.

I, G. Krishnasamy, hereby declare that the particulars given above are, true to the best of my knowledge.

G. Krishnasamy
Publisher & Editor

விருந்து

மதிப்புரை

குருக்ஷேத்திரம்: ஓர் இலக்கியத் தொகுப்பு. உரிமை ஆசிரியர்கள். விற்பனை உரிமை: தமிழ்ப் புத்தகாலயம், 576 பைகிராப்ட்ஸ்ரோடு, சென்னை–5.

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு நல்ல இலக்கியத் தொண்டிற்குச்சான்று பகர்ந்துள்ளனர் இத்தொகுப்பிற்கு வித்திட்டவர்கள். அய்யப்பப் பணிக்கரின் கவிதைத் தலைப்பை தங்கள் தொகுப்பிற்குத் தலைப்பாக வைத்துள்ளனர் என்று கருதலாம். ஏனெனில் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் கண்ணன், சகுனி இவர்களின் அரசியல் சதுரங்கத்தின் விளைவான இப்பெரும் போர்களத்தை தங்கள் நூலுக்குத் தலைப்பாக வைத்ததற்கு சரிவர எந்தக் காரணமும் புலப்படவில்லை. ஒருவேளை பணிக்கரின் கவிதை மதிப்பீட்டைத் தன்னுள் அடக்கியிருப்பதனால் வைத்திருக்கலாம். கட்டுரை, சிறுகதை, கவிதை, குறுநாவல், நாடகம் என்ற எல்லா இலக்கிய வகைகளையும் கொடுத்திருக்கிறார் இதன் தொகுப்பாசிரியர் நகுலன். இந்நூல் மதிப்பிற்குரிய ஒன்று.

பல ஆசிரியர்களின் பல்வேறு இலக்கியப் படைப்புகள் உள்ளமையால் அவற்றின் நிறைகுறைகளை விரித்துரைத்தல் இயலாது. எனவே ஓரிருவரிகளில் அதனதன் மேம்பாட்டினைக் கூற விழைகிறேன். இது முத்திரையுமல்ல, இலக்கியத் திறனாய்வுமல்ல, ஒரு மதிப்பீடு.

கட்டுரைகள்:

அவசரக் கோலத்தில் அரைகுறைபிச்சுக்கள் வார்த்த குறை பிண்டங்கள் பெரும்பாலான இன்றைய சிறுகதைகள் என்று மண்டையில் அடிக்கும் திருமதி ஹெப்சிபா ஜேசுதான், நல்ல கருவில்லா உருவமைப்பால் கதைகள், அலசல் மனப்பாங்கு படைத்த இன்றைய வாசகர் உள்ளத்தைக் கிளரா என்று சிறுகதையை ஒரு கோணத்தில் உணர்ச்சி வயப்பட்டுக் காண்கிறார். சுவையான கட்டுரை.

மலையாளத்தில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ள பி. கே. பாலகிருஷ்ணனின் கட்டுரை தரமான இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரை. தரமான நல்ல நாவலுக்கு பருமனும் ஓர் அடிப்படைத் தேவை எனத் தொடங்கி, கதையின் வன்மையால் மட்டும் ஊன்றி நிற்கும் ஒரு நாவலை நல்ல நாவல் என்று நிர்ணயிக்க முடியாது என்பதை சுவைபட விளக்கி, சுவையும் விறுவிறுப்பும்தான்

நல்ல நாவலுக்கு இலக்கண மென்றால் குற்ற நாவல்கள் தான் இன்றைய சிறந்த நாவல்கள் என மெல்லிய நகைச் சுவையால் நம்மைச் சிந்திக்க வைத்து, தன் திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப எல்லையை அறிந்து செயல்படல் நாவலின் இலக்கணம் என்று வரையறுத்து, இத்தனைக்கும் மேலாக உணர்ச்சி முறுக்கால், உயிர்த் துடிப்பால், சொல்லித்தான் ஆகவேண்டும் என்ற உள் விழைவால், அனுபவங்களுக்கேற்ப ஆயிரம் கோணங்களைக்காட்டி, அதனையும் மீறி மற்றவர் உள்ளத்தைக் கிளர வைப்பதே ஒரு மகத்தான நாவல் என்று முத்தாய்ப்பு வைக்கிறார் பி. கே. பாலகிருஷ்ணன்.

ம. இளைய பெருமாள் தொல்காப்பியர் உவமை பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களை உரையாசிரியர்களின் மேற்கோள் களுடன் செவ்வனே விளக்குகிறார். குறிப்பாக "புலவன் தான் கருதியது கூறுதவழியும் கேட்டோர் இவன் கருதிய பொருள் ஈது என்று ஆராய்ந்து கோடற்கு கருவியாகிய சில சொல் கிடப்பச் செய்தல் வேண்டும்" என்ற நச்சினார்க்கினியரின் உரைகொண்டு உள்ளுறை உவமத்தால் பொருள் ஒருமைப்பாடும், தர உயர்வும் கவிதைக்குக் கிடைக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவது கொள்ள வேண்டிய ஒன்று.

சிவராமுவின் மறுபிறவியான பிரேமில் பானுசந்திரனின் "கோடாரி" இலங்கையின் இனக்கலவரத்தைப் பின்னணியாகக் கொண்டிருக்குக்கும் கட்டுரை. இன உளத்தடிப்புகளை அழகான உணர்ச்சி மிக்க படிமங்களால் அலசுகிறார். இது சிந்தனைக்கு ஒரு விருந்து.

திருத்தகு முனிவன் நச்சினார்க்கினியரின் பெருமையைப் பற்றி பாடசாலைக் கட்டுரை வரைந்த டேவிட் சத்திய நேசன் முன்னுரை யில் "எந்த எழுத்தாளனையும் பற்றி ஒரு கருத்து கூறும் முன், கூறுவோர், அவனைப் பற்றிய முழுச் செய்திகளையும், அவன் காலத்து சூழ்நிலைகளையும் அவனுக்கிருந்த வாய்ப்புகளையும் அறிந்து கொள்ள வேண்டும்" என்று வலியுறுத்துகிறார். ஆனால், இவ்வளவு பெரிய கட்டுரையில் நச்சினார்க்கினியரின் காலம், சமகாலத்தவர், வாய்ப்பு, அவற்றின் ஆதிக்கம் அவர் எழுத்தின்மேல் எவ்வளவு என்பதைப் பற்றிக் கூறாது விட்டது ஏன்? எனினும் பள்ளிக்குறிய புள்ளி விவரம்.

மௌனியின் மோனத்தில் திளைத்த சிவராமு மௌனி "சுளுவான" தத்துவச் சரட்டை அனுமதிப்பதே இல்லை என்று அடித்துக் கூறி, பொருட் செறிவு நிறைந்த அவர் வாக்கியங்களின்

துணையால் படிக்கப் படிக்க அலுக்காத உணர்வோட்டமும் இலக்கிய நயமும் அவர் கதைகளில் உண்டு என உணர்ச்சி வயப்பட நிறுவுகிறார். பார்வை பாசம் நிரம்பியது.

மீண்டும் சிவராமு. படைப்பாளி இயக்கத்தை மௌனிக் கண்ணாடியால் பார்க்கும் இவர் "எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்" என்னும் மௌனியின்வரியை கரும்பாய்ச் சுவைக்கிறார். அறுவை வேலையென்று சொல்லி விட்டு ஆழமான கட்டுரையைத் தீட்டும் சிவராமு அதிசயம், பிரமிப்பு கேள்விகள் இவைதான் படைப்பாளியின் படைப்புக்கு வித்துக்கள் என்று கூறி முடிக்கிறார்.

குருக்ஷேத்ரம் வந்து விட்டது. எலியட்டின் பாழ் நிலமும் குருக்ஷேத்ரமும் ஒப்பிடற்குரியன என்கிறார் தக்ஷிணாமூர்த்தி. எலியட்டைப்போல் இன்றைய சமுதாயத்தை கூறுபோட்ட பணிக்கருக்கு தனி நோக்கிருப்பதாகத் தெரியவில்லை. "மண்ணை விண்ணாய்க்கண்ட கண்கள் மறதியின் திண்ணையிலிருந்தேனம் செய்வதேன்" என்று கூறும் பணிக்கர் இன்னும் இளைஞர்தான்; முதிர்ச்சி பெறலாம் என்று கூறுகிறார் கட்டுரையாளர்.

கதைகள்:—

'நான்' பிறவிப்பெருங்கடல் நீந்தாது போலிருக்கிறது; எனினும் ரிஷிபிண்டம். நல்ல தெளிவு. சூழ்நிலையை எவ்வளவு அழகாக அலசியிருக்கிறது. உளத்தோண்டலுக்கும் எட்டாத கற்பனை வளம். நீலபத்மநாபனின் இப்படைப்பைப் படிக்க முதலாண்டின் அனுபவம் வரும்.

விஜயன் கரோட்டுவின் "பஞ்சலோஹ"த்தால் வார்த்த சிலையை தமிழில் அச்செடுத்திருக்கிறார் தக்ஷிணாமூர்த்தி. ஆசிரியர் கூத்தாடினாலும் காரியத்தில் கண்வைய்டி என்று "சிறையிலிருந்து குதித்து வெளியில் வர ஆவல் பூண்டு, எட்டிப் பார்க்கின்ற வடிவொத்த முலைகளை" யுடைய அழகி இலந்தைப் பழப்பாட்டைப் பாடாமலே காசு பெற்ற கதையை கனகச்சிதமாக வளர்த்திருக்கிறார். சொர்க்கமல்ல பஞ்சலோஹம். பெண்ணின் பொல்லாப்பு நிறைந்த சிரிப்பு.

அடுத்தது அசோக மித்திரனின் 'விமோசனம்'. இதைப் படித்தவர் சிலர் இப்படி நடக்குமோ என்றனர். ஏன் நடக்காது என்றனர் வேறு சிலர். இப்படி சென்னையில் சில எழுத்தாளர்களுக்குள் பேச்சு நடந்தது. இப்படி நடக்கலாம் என்றால் 'விமோசனம்'

தமிழ்ச் சிறுகதைக்கு ஒரு விமோசனத்தை அளிக்கும் ஓர் அற்புதக் கதை. அசோக மித்திரனுக்கு எப்படிப் புரிந்தது இப்படிப்பட்ட அள்ளும் சோகம்.

மௌனியின் கதைகள் எப்போதுமே தனிரகம். அவருடைய மொழியும் ஒரு தனி ரகம்தான். தெளிவான தன் விழிப்போடு, மனித மனத்தின் பல கோணங்களைப் பொருளாகக் கொண்டு அவர் எழுதும் எல்லாக் கதைகளிலும் காதுக்கு ஒரே ராகமாகத் தொனித் தாலும் எத்தனை எத்தனை பாவங்கள்! உணர்ச்சி முறுக்கேறிய உறவு, பந்தம், பாசம்; அவ்வகையில் ஒரு கதை.

காமிக்கில் தொடங்கி, காதலில் விரிந்து சாவிலே முடிகிறது மாலாவின் டயரி. ஆனால், அழுத்தமான வரிகள். சினிமா போல இருந்தாலும் சிக்மெண்ட் பிராய்டையும் பார்க்கலாம். சில இடங் களில் ஆசிரியர் நெஞ்சை ஒரு கிள்ளு கிள்ளி விடுகிறார். "ஒருவன் தொட்ட முதல் தடவை உடம்பு எவ்வளவு wonderful...". எஸ். ரங்கராஜனின் "தனிமை கொண்டு" என்ற கதை.

சுக்ர நீதியை சார்வாகன் 'உத்தரியத்தில்' படிக்கிறார். மரத்தை மறைத்தது மாமதயானை, மரத்தில் மறைந்தது மாமதயானை. கதையை மறைத்தது சரிகை உத்தரியமே. உத்தரியத்தை விலக்கிப் பார்க்க வேண்டும்.

பகற்குருடு உமாபதி கொடிக்கவிபாடி கொடியேறியதாம். பழைய காங்கிரஸ்காரர் சின்னூரில் கொடியேற்றினர். யாருக்கு ஏற்றம்? சாருவாகனின் 'சின்னூரில் கொடியேற்றம்' என்ற இக் கதையில் அரசியல் வாடை வீசினாலும் புதிய முறையில் எழுதப்பட்ட கதை.

கதைகளுக்கு முத்தாய்ப்பாக மௌனியின் கதை அமைந்திருக் கிறது. மௌனி 'அத்துவான வெளியில்' சஞ்சரிக்கிறார். எச்சாதி மரம் என்று தெரியாத ஒன்று தன் நிழலால் தான் உதிர்த்த மலர்களை ஒதுக்குகிறது. நிழல்கள் பேயாய் ஆடுகின்றன. கதாநாயகன் விழித்தானா என்பதை மௌனியின் கதையைப் படித்துத்தான் வாசகர் தெரிந்து கொள்ள வேண்டும்.

குறுநாவல்:-

ரோகிகள், நகுலனின் சோதனை நாவல். மு. வ. வின் அல்லி போல் ஆஸ்பத்திரி டயரி. கால வட்டத்தில் பாத்திரங்கள் நடிக் கின்றனர் நாடகமா, நாவலா என்ற முறையில். 'ரோகிகள் படிக்க

சுஜீக்கியின் ஜென்னை படியுங்கள்' என்கிருர் நகுலன். மொத்தத்தில் நல்ல ஆஸ்பத்திரி. சோதனை வெற்றி; சாதனை தோல்வி.

கவிதைகள்:–

ஜேசுதாசனின் ஆட்டுக்குட்டியும் மரமும் விளையாட்டுப்பிள்ளையும் மொழி பெயர்ப்புகள். கருத்து பிறழா விட்டாலும் கவிதை பிறழுகிறது.

ஐயப்பப் பணிக்கரின் சாபவிமோசனம் திரு நீலபத்மனுபனுல் மணிப்பிரவாளத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. பிறமொழி சொற்கள் சேரலாம். ஆனுல் எவ்வளவு அளவு ?

நீலபத்மனுபனின் நீண்ட கவிதை இறுக்கம் இன்றி இருந்தாலும் ஒரு தத்துவக் கவிதை. நல்ல முயற்சி. பாலையில் எருக்கம் பூவும் ஓர் அழகே.

படிக்கவா கோர்க்கவா என்றபடி எழுதியிருக்கும் ஹரி சீனிவாசனின் கவிதையில் அங்கே அங்கே அற்புதப் படிமங்கள் உண்டு.

'நொடி'யில் மாறும் இவ்வையகத்தை ஏன் இத்தனைப்படியில் அளக்கிருர். ரொம்பப் பொறுமைசாலி.

ஏனே தெரியவில்லை கட்டுப்பாடின்றி பேனு இப்படிக் கவிதை களை வரிந்து தள்ளியிருக்கிறது குருக்ஷேத்திரத்தில். கதைகள், கட்டுரைகள் போல் அவ்வளவு தரத்திற்கு கவிதைகள் வராததற்கு, சந்தைக்கு சரிவர சரக்கு வராத காரணமோ?

வல்லிக் கண்ணனின் "முடிவா முக்கியம்?" கவிதை என்னுச்சு ?

ஷண்முக சுப்பையா குழந்தைகளுக்கு நிறைய எழுதியிருக்கிருர். மதிப்பீட்டை குழந்தைகளுக்கே விட்டு விடுவோம்.

நாடகம்:–

தீர்ப்பு: படித்துச் சிரியுங்கள்.

முடிவு:–

திரு க. நா, சு. சொன்னுராம்: 68ல் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் நடந்தன. ஒன்று உலகத் தமிழ் விழா; இரண்டு குருக்ஷேத்திர வெளியீடு. இவற்றில் இரண்டாவதே சிறந்தது. குருக்ஷேத்ரம் பற்றிய இந்தப் புகழ்ச்சியுரையை அப்படியே பெரிதாய் கொள்ளா விட்டாலும், குருக்ஷேத்ரம் நல்ல முயற்சிதான்; 68ல் தமிழனைக்குச் சூட்டிய நறுமணம் கமழும் கதம்பச் சரந்தான். இத்தகைய தொகுப்புகளுக்கு வாசகரின் நல்லாதரவு என்றும் தேவை.

(வி. து. சீனிவாசன்)

ஜப்பானியக் கவிதைகள்

தமிழில்:
செல்வம்

[ஜப்பானியக் கவிதையுலகில் மிகவும் பரவலாகப் பயன்பட்டு வருகின்ற 'ஹைகூ' என்பது குறுகிய யாப்பு வடிவையும் பலவகையான விதிகளையும் உடையது. என்றாலும் இவ்வகைக் கவிதைகளில் நெஞ்சங்கவரும் கற்பனையும், அருமையான சொற்கட்டும், இறுக்கமான உருவ அமைதியும், நுணுகிய பார்வையும், ஆழ்ந்த பொருள்நயமும் உண்டு. இந்த நலங்களையெல்லாம் கீழ்வரும் கவிதைகளில் காணலாம்.]

1
கிளைக்குத் திரும்பும்
விழுந்த சருகா?
பட்டுப் பூச்சி.

2
மூங்கில்நிழல் இரவெல்லாம்
மாடிப்படி பெருக்கிற்று;
தூசுதான் அகலவில்லை.

3
திருடன் விட்டுச்
சென்றது இதுவே:
பலகணி நிலவு.

4
தூரிகை எதுவும் இன்றி
காற்றுக்கு வண்ணம் தீட்டும்
காற்றாடி மரம்.

5
எனது களஞ்சியம்
எரிந்ததும் ஏதுமில்லை,
நிலவை மறைக்க.

6
ஓங்கிய கோபுரம் ஏறினேன்.
அங்கே மரத்தின் நுனியில்
இருந்தது பட்டுப் பூச்சி.

7
கோடை மழையில்
குறுகி விட்டன
கொக்கின் கால்கள்.

8
கோதை ஒருத்தி நிலவினில்
பேரி மரத்தின் மலர்களில்
கடிதம் படிக்கிறாள்.

9
புதர்வெளிக் கதவு.
அதற்குப் பூட்டாய்
இந்த நத்தை.

10
பார்லி பயிரின் சாரிகளைத்
தைத்துத் தைத்துச் செல்லும்
பட்டுப் பூச்சி ஒன்று.

NADAI: Edited and Published by G. Krishnasamy from 40 Nathamar Street, Salem-3; and printed by R. Duraisamy at Saravana Printing Works, 1, North Muniappan Koil Street, Karungalpatti, Gugai, Salem-6.